Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror www.tamilmirror.lk

MONDAY, MAY 9, 2022

திங்கட்கிழமை மே 09, 2022 | ஒளி: 07 கதிர்: 300 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# காலி முகத்திடலில் காளிக்கு பூஜை



காலி முகத்திடல், ஜனாதிபதி செயலகம் மற்றும் “ கோட்டா கோ கம” ஆகியனவற்றில், அரசாங்கத்துக்கு எதிராக பல்வேறு வடிவங்களிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

பறை அடித்து, உடுக்கு அடித்து, காளிக்கும் மாடனுக்கும் பூஜை வழிபாடுகள் காலி முகத்திடலில்,

தொடர்ச்சி P2

# “புதுன் அப்பாச்சி போங்க இப்போதைக்கு போதும்”

பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ, மத வழிபாடுகளில் ஈடுபடுவதற்காக அநுராதபுரத்தில் உள்ள விஹாரைகள் பலவற்றுக்கு நேற்று (08) சென்றிருந்தார். அங்கெல்லாம், பிரதமருக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன.

மஹா போதிக்கு அண்மையில் நின்றிருந்த சிலர், பிரதமருக்கு எதிராகக் குரல்லெழுப்பி, எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதன்பின்னர், ருவன் வெலிசாயவிலும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

அநுராதபுரத்தில் தொடர்ச்சியாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களில் சிலரே, ருவன் வெலிசாயவிலும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இவ்விரு விஹாரைகளிலும் வழிபாடுகளை நிறைவு செய்துகொண்டு, மிரிசவெட்டியவுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ சென்றபோது, அங்கும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. எனினும், பாதுகாப்புப் பிரிவினர் பிரதமரை அவ்விடத்திலிருந்து பாதுகாப்பாக அழைத்து வந்துவிட்டனர்.

“புதுன் அப்பாச்சி கும்பிடுகின்றோம்; கடவுளை நாளை (இன்று) இருக்கும் நல்ல நேரத்தில், நல்ல தீர்மானத்தை எடுத்து நாட்டை காப்பாற்றித் தாருங்கள். புதுன் அப்பாச்சி உங்களிடம் அவ்வளவுதான் கேட்கின்றோம். நாட்டை காப்பாற்றித் தாருங்கள். உங்களிடமிருந்து நல்ல செய்தியை நாளைக்கு (இன்று) எதிர்பார்க்கின்றோம். நீங்கள் செய்தீர்கள்தான், இப்போதைக்குப் போதும்” என்று ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தவர்கள் குரல் எழுப்பினர்.



“மக்களுக்காக எதையும்

# தியாகம் செய்வேன்”

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

நாடு பேரழிவுக்கு உள்ளாகியுள்ள இந்த வேளையில், நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டமைப்பு என்பன தொடர்ந்தும் முன்நிற்கும் என்றும் அதற்காக எந்தத் தியாகத்தையும் செய்யத் தயங்காது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சட்டத்தரணிகள் சங்கத்துக்கும் எதிர்க்கட்சியினருக்கும் இடையில் நேற்று (08) நடைபெற்ற சந்திப்பின்

தொடர்ச்சி P2



கொழும்பு அரசியலுக்கு

# இவ்வாரம் முக்கியம்

**மஹிந்த ராஜபக்‌ஷவின் முக்கிய அறிவிப்பு வெளிவரும்**

**சட்டத்தரணிகளின் யோசனைக்கு சஜித் தயார்**

அடுத்து என்ன நடக்கும் என்றெல்லாம் பலரும் தலையைப் போட்டு பிய்த்துக்கொண்டிருக்கும் நிலையில், கொழும்பு அரசியலில் இவ்வாரம் தீர்மானம் மிக்கதாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை (06) நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தின் போது, பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவை பிரதமர் பதவியிலிருந்து விலகிக்கொள்ளுமாறு, ஜனாதிபதி கேட்டுக்கொண்டார் என்றும், அதன்பிரகாரம் இராஜினாமா கடிதத்தில் பிரதமர் கையெழுத்திட்டார் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

தொடர்ச்சி P2

# ஆமர் வீதியில் 100 சிலிண்டர்கள் மாயம்

## எரிவாயு கோரி பல இடங்களிலும் வீதி மறியல்

கொழும்பின் சில பகுதிகளில் சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்குமாறு கோரி வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

கொழும்பு - ஹைலெவல் வீதியின் நாவின்ன பகுதியில் நேற்று (08) காலை முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது. அங்கு ஆர்ப்பாட்டத்தில்

தொடர்ச்சி P2



# நீர்த்தாரை வாகனத்துக்கு நிதி அளிக்கவில்லை

## கடனுதவியில் பெற்றதாக வெளியான செய்தியை மறுக்கிறது இந்தியா

இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கடனுதவி திட்டங்களின்கீழ், இலங்கை அரசாங்கத்தால் நீர்த்தாரை வாகனம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக வெளியான செய்தியை

தொடர்ச்சி P2



அவசரகாலச் சட்டத்தால்

# மக்களின் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாது

## ஹட்டனில் விஜித ஹேரத் தெரிவிப்பு

ரஞ்சித் ராஜபக்ஷ

அவசரகால நிலையைப் பயன்படுத்தி, மக்களை ஒடுக்குவதே பிரதமரின் பதவி விலகல் நாடகத்துக்குள் இருப்பதாக தெரிவித்துள்ள மக்கள் விடுதலை

தொடர்ச்சி P2



அவசரகாலச் சட்டத்தை

# உடனடியாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவும்

## 2 மருத்துவ சங்கங்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை

நாட்டில் அவசர காலச் சட்டத்தை பிரகடனப்படுத்தியுள்ள அரசாங்கத்தின் ஜனநாயக விரோத நடவடிக்கையை, அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் கடுமையாக எதிர்த்துள்ளதுடன், அவசரகாலச் சட்டத்தை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை மருத்துவ சங்கம், அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அடக்குமுறைச் சட்டங்களை உடனடியாக நீக்கி, சர்வஜன வாக்கெடுப்புக்கு தலைவணங்க வேண்டுமென அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டொக்டர் செனல் பெர்னாண்டோ கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2




சட்டம் மற்றும் ஒழுங்கை மதிக்காது

# ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆத்திரமூட்டுகின்றனர்

## அமைதியாக போராடுமாறு பாதுகாப்பு அமைச்சு கோரிக்கை

நாட்டின் சட்டம், ஒழுங்கை பொருட்படுத்தாமல் ஆத்திரமூட்டும் வகையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் நடந்துகொள்வதுடன், சட்டம், ஒழுங்கைப் பேணுவதில் அர்ப்பணிப்புடன் செயற்படும் பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினரின் பணிகளுக்கு இடையூறு விளைவிப்பதாகவும், நாட்டின் பொதுச் சட்டத்தை அவமதிப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# இலங்கை வாழ் மக்களுக்காக உண்டியல் தந்த தமிழக சிறுமி

தமிழகத்தை சேர்ந்த சிறுமி ஒருவர், தனது உண்டியல் சேமிப்பு பணத்தை, இலங்கை மக்களுக்காக வழங்குமாறு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரிடம் வழங்கியுள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை பகுதியை சேர்ந்த பில்சா சாரா எனும் மாணவி, வீட்டில் தனக்கென உண்டியலில் சேர்த்து வந்த 4,400 இந்திய ரூபாய் பணத்தை, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சங்கர் லால் குவமத்திடம் வழங்கிய

தொடர்ச்சி P2



# ஐ.எம்.எப்- இலங்கை குழு 15 நாள்கள் தொடர் பேச்சு

சர்வதேச நாணய நிதியத்தின் குழு, இலங்கை பிரதிநிதிகளுடன் தொடர்ச்சியாக 15 நாள்களுக்கு பேச்சுவார்த்தையை முன்னெடுக்கவுள்ளது. இன்று (09) ஆரம்பமாகும் இந்தப் பேச்சுவார்த்தை, 23 ஆம் திகதி நிறைவடையவுள்ளதுடன், 15 நாள்களும் இணையவழியூடாகவே பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படவுள்ளது.

இலங்கை தொடர்பிலான புதுப்பிக்கப்பட்ட அறிவித்தலை, சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கையின் வெளிநாட்டு பிரதிநிதி மசாயிரோ நொஸாகி வெளியிட்டுள்ள நிலையிலேயே இந்தப் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படவுள்ளது.

தொடர்ச்சி P2

நம்பிக்கையில்லாப் பிரேரணை

# இன்று இறுதி

பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்கள், இன்று (09) முக்கிய சந்திப்பொன்றில் ஈடுபடவுள்ளனர்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் அழைப்பின் பேரில், சர்வகட்சி தலைவர்களின் கூட்டம், இன்று (09) காலை 10 மணியளவில் பாராளுமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது, ஐக்கிய மக்கள் சக்தியால்

தொடர்ச்சி P2

# தமிழ் பதாகைகளுடன் தேரர்கள் ஆர்ப்பாட்டம்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், பொது அமைப்புகள் இணைந்து அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தை, மட்டக்களப்பில் நேற்று (08) முன்னெடுத்திருந்தனர்.

செங்கலடி சந்திவரை பேரணியாகச் சென்று அங்கு ‘கோட்டா கோ ஹோம் கம’ வை அமைத்து, ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி P2



கடுவெல நீதவானின் இல்லத்தில்

# கடமை செய்யத் தவறிய கான்ஸ்டபிள் நீக்கம்

கடுவெல நீதவான் நீதிமன்ற நீதவான் சனிமா விஜேபண்டாரவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு, நேற்று (08) அறிவித்தது.

தொடர்ச்சி P2

# இன்று முதல் எதிர்ப்பு வாரம்

இன்று (09) முதல் எதிர்ப்பு வாரம் அனுஷ்டிக்கப்படும் எனத் தெரிவித்துள்ள நிறுவனங்களுக்கு இடையிலான ஊழியர் சங்கம், அந்தந்த நிறுவனங்களுக்கு முன்பாக இருந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் அறிவித்துள்ளது.

# “சம்பளம் வழங்க பணம் இல்லை”

தற்போது இருக்கும் நிலையில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் கூடிய கடன் எல்லையை அரசாங்கம் அண்மித்துவிட்டது என, கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தின் போது, நிதியமைச்சர் அலி சப்ரி எடுத்துரைத்துள்ளார்.

அரசாங்கத்துக்கு 2.9 ரில்லியன் மட்டுமே கடன் பெறமுடியும். அந்த எல்லையை 4 ரில்லியன் வரையிலும் உயர்த்தவேண்டுமென அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டுவந்த நிதியமைச்சர், அவ்வாறின்றேல் அடுத்த மாதம் முதல் அரச ஊழியர்களுக்கு வேதனம் கொடுப்பதற்கு பணம் இல்லை என்றும் எடுத்துரைத்துள்ளார்.

கடன் எல்லையை நீடிக்கவேண்டுமாயின் பாராளுமன்றத்தின் அனுமதியை பெறவேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில், அரசாங்கத்துக்கு அது சாத்தியமாகாது என்றும் எடுத்துரைத்துள்ளார்.

PAGE 1 தொடர்ச்சிகள்

# “தியாகம் செய்வேன்”

பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கி, ஐக்கிய மக்கள் சக்தியால் கொண்டு வரப்பட்ட 21ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதும், பொறுப்புக்கூறல் மூலம் செயற்படும் அரசாங்கத்தை கட்டியெழுப்புவதும் இன்றியமையாதது என தெரிவித்தார். இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சமர்ப்பித்த தீர்மானத்துக்கும், ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்துள்ள 21 ஆவது திருத்தச் சட்டத்துக்கும் இடையில் பாரிய முரண்பாடுகள் இல்லை எனவும், அந்த முன்மொழிவுகளின் அடிப்படையில் பல முன்னேற்றகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தற்போதைய நெருக்கடிக்கு சர்வாதிகார நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையே பிரதான காரணம் எனவும் அது உடனடியாக இல்லாதொழிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்த அவர், இந்த விடயத்தில் சட்டத்தரணிகள் சங்கம் தலையிட்டு, நாட்டில் ஜனநாயகத்தை கொண்டு வருவதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் முற்போக்கான முயற்சிகளுக்கு ஆதரவளிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக் கொண்டார்.

நாட்டின் தற்போதைய நிலையில், கிரீடங்களையோ பதவிகளையோ அணிவது முக்கியமல்ல. மாறாக சமூக மற்றும் தேசிய பொறுப்பை நிறைவேற்றுவதே முக்கியமானது. அதற்காக அனைத்து தியாகங்களையும் செய்ய தயாராக இருப்பதாக அவர் கூறினார்.

நாடு முன்னேற வேண்டுமாயின் 21ஆவது திருத்தத்தை அமல்படுத்தி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை உடனடியாக இல்லாதொழிக்க வேண்டும் என தெரிவித்த அவர், அதன் அடிப்படையில் எந்தச் சவாலையும் ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவித்தார்.

இந்த நெருக்குடிக்கு முதல் காரணமான நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பது குறித்து எமது தீர்மானத்தை தெரிவித்தோம். நாட்டு மக்களின் துயரங்களை நாம் அறிவோம். ஜனாதிபதியை சந்திக்கவுள்ளோம்; அவரது அபிப்ராயங்களை தெரிந்துகொள்ளவுள்ளோம் என்றார்.

# காலி முகத்திடலில் காளிக்கு பூஜை

முகத்திடலில், சனிக்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்டன. காலி, மாடனாக வேடம் பூண்டிருந்தவர்கள், மருள் வந்து ஆடினர். இந்த அரசாங்கம் வீட்டுக்குப் போகவேண்டுமென சாபமிட்டதுடன், நாட்டுக்கும் மக்களுக்கும் விடிவுகாலம் பிறக்கவேண்டுமென அருள்பாலித்தனர்.

இந்நிலையில், சில வாரங்களுக்கு முன்பாக, காலிமுகத்திடல் தொவில் அடித்து, பேய் விரட்டப்பட்டமை மற்றும் பௌத்த தேரர்கள் ஆகம வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இவ்வாரம் முக்கியம்

ஜனாதிபதி கேட்டுக்கொண்டதை, அமைச்சரவைக் கூட்டத்துக்குச் சென்றிருந்தவர்கள் உறுதிப்படுத்திய போதிலும், ஜனாதிபதி அவ்வாறு எந்தவிதமான கோரிக்கையையும் விடுக்கவில்லை. மஹிந்த ராஜபக்‌ஷவும் கைச்சாத்திடவில்லையென பிரதமர் தரப்பு விளக்கமளித்திருந்தது.

இன்று (09) திங்கட்கிழமை பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ, முக்கிய அறிவிப்பொன்றை விடுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதே எதிர்பார்ப்பு, கடந்த 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் இருந்தது. எனினும், பிரதமர் எவ்விதமான தகவல்களையும் வெளியிடவில்லை.

இதற்கிடையே பிரதமர் பதவியைப் பொறுப்பேற்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவுக்கு ஜனாதிபதி விடுத்த அழைப்பை சஜித் நிராகரித்துவிட்டார்.

சஜித் ஏற்றுக்கொள்ளாவிடின் தாங்கள் தயாரென, அரசாங்கத்திலிருந்து விலகி, எதிரணியில் சுயாதீனமாக இயங்கும் முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார, உதய கம்பன்பில தெரிவித்திருந்தனர்.

எனினும்,சட்டத்தரணிகள் சங்கத்தால் முன்வைக்கப்பட்டிருக்கும் யோசனைக்கு இணங்க இடைக்கால அரசாங்கத்தில் அங்கம் வகிப்போமென ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது. இதற்கிடையே சட்டத்தரணிகள் சங்கத்துக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவுக்கு இடையில் ஜனாதிபதி மாளிகையில், நேற்று (08) மாலை முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றது.

# மக்களின் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாது

முன்னணியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத், ஆனால் “மக்கள் அதற்க பயப்படமாட்டார்கள். ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்ட போதே மக்கள் வீதிக்கு இறங்கினர். எனவே மக்கள் உணர்ச்சிகளை யாராலும் கட்டுப்படுத்த முடியாது” என்று தெரிவித்தார். ஹட்டனில் நேற்று (08) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளதுடன், அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், “முழு நாடும் ஒரே குரலில் பிரதமரும் ஜனாதிபதியும் பதவி விலக வேண்டும் என்றும் இவர்கள் பதவி விலகினால் மாத்திரமே நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் பிரச்சினையை தீர்க்க முடியும் என்றும் தெரிவிக்கின்றார்கள். தற்போது பிரதமர் பதவி விலகப்போவதாக தெரிவிக்கப்படுகின்றது. அது மாத்திரம் போதாது. எல்லோரும் கூறுவதைப் போல் கோட்டவும் வீட்டுக்குப் போக வேண்டும்” என்று தெரிவித்தார்.

“அவ்வாறு பிரதமர் பதவி விலகி, புதிய அரசாங்கம் உருவானாலும் அமைச்சரவையின் பிரதானியாக ஜனாதிபதியே இருப்பார். எனவே புதிய அமைச்சர்களையும் பிரதமரையும் ஜனாதிபதியே நியமிப்பார்” எனவும் சுட்டிக்காட்டினார்.

“எனவே மக்களுக்கு பிரச்சினைகளை ஏற்படுத்திய, விவசாயிகளுக்கு உரத்தை இல்லாமல் செய்த கோட்டாபய ராஜபக்‌ஷவின் தலைமையில் புதிய அமைச்சரவை உருவாக்கினால் நாட்டின் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. இதனால் மேலும் நெருக்கடி அதிகரிக்குமே தவிர குறைவடையாது” என்று தெரிவித்தார்.

“ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசாங்கமே பதவி விலகவேண்டும். அப்படியானால் மாத்திரமே சகல கட்சிகளும் ஒன்று கூடி இடைக்கால அரசாங்கம் ஒன்றை உருவாக்க முடியும். தேசிய மக்கள் சக்தி என்ற ரீதியில் சர்வகட்சி அரசாங்கத்தில் இணைய வேண்டுமாயின் பிரதமர், ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கமே பதவி விலகவேண்டும். இல்லையேல் இந்தப் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்” என்றார்.

# ஆமர் வீதியில் 100 சிலிண்டர்கள் மாயம்

ஈடுபட்டிருந்தவர்களுக்கும் அவ்விடத்தை கடந்துச் செல்வதற்கு முற்பட்ட வாகனங்களின் சாரதிகளுக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.

ஹைலெவல் வீதியின் நாவின்ன சந்தி மற்றும் விஜேராம சந்தி ஆகிய பகுதிகள் மூடப்பட்டு போக்குவரத்துக்கு தடை ஏற்பட்டுள்ளதால் மாற்றுப்பாதைகளைப் பயன்படுத்துமாறு சாரதிகள் அறிவுறுத்தப்பட்டிருந்தனர்.

இதேவேளை, கொழும்பு, ஆமர்வீதியில் நேற்று முன்தினம் (07) எரிவாயு கோரி போராட்டம் நடத்தப்பட்டிருந்த நிலையில், நேற்றையதினம் (08) அப்பகுதிக்கு எரிவாயு லொறி கொண்டு வரப்பட்டிருந்தது.

இந்நிலையில், மக்கள் கூட்டம் அதிகரித்ததையடுத்து லொறியிலிருந்த 100 சிலிண்டர்கள் மாயமாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, எரிவாயுவுக்காக பல பகுதிகளில் மக்கள் நேற்றும் நீண்ட வரிசையில் காத்திருந்ததுடன், சில இடங்களில் வீதி மறியலிலும் மக்கள் ஈடுபட்டிருந்தனர். மாலைவேளையில் கொழும்பு-02 கொம்பனித்தெருவை மறித்தும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# நீர்த்தாரை வாகனத்துக்கு நிதியளிக்கவில்லை

இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் மறுத்துள்ளது. இவ்வாறான செய்தி அறிக்கைகளில் எந்தவிதமான உண்மைத்தன்மையும் இல்லையென இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்பட்ட எந்தவொரு கடனுதவி திட்டங்களின்கீழும் நீர்த்தாரை வாகனங்களெதுவும் இந்தியாவால் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. தற்போதைய சூழலில் இலங்கை மக்களுக்கு தேவையான உணவுப்பொருட்கள், மருந்து மற்றும் ஏனைய அத்தியாவசியப்பொருட்கள் போன்றவற்றுக்காகவே ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி வழங்கப்பட்டது. இலங்கை மக்கள் தற்போது எதிர்கொள்ளும் சவால்களை முறியடிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகள் மற்றும் ஒத்துழைப்புகளுக்கு இவ்வாறான தவறான அறிக்கைகள் எந்தவிதமான ஆக்கபூர்வமான பங்களிப்பையும் வழங்கப்போவதில்லை என்றும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கை வாழ் மக்களுக்காக உண்டியல் தந்த தமிழக சிறுமி

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அங்கு வசிக்கும் மக்கள் உணவின்றி தவித்து வருவதால், இலங்கை மக்களுக்காக தனது சேமிப்பு பணத்தை அன்பளிப்பாக வழங்குவதாக சிறுமி கூறியுள்ளார். சிறுமியின் இந்தச் செயற்பாட்டை மாவட்ட ஆட்சியாளர், பாராட்டி உள்ளார்.

# உடனடியாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவும்

மேலும், தற்போது அமல்படுத்தப்பட்டுள்ள அவசர காலச் சட்டத்தை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை மருத்துவ சங்கம், அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. அவசர காலச் சட்டத்தை அமல்படுத்துவதனூடாக அமைதியான முறையில் போராட்டத்தை மேற்கொள்வோர் வன்முறையில் ஈடுபடுவதற்கு வழிவகுக்கும் எனவும் பொதுமக்களின் எதிர்ப்புக்கு செவிசாய்த்து பிரச்சினைக்கு உடனடி தீர்வு காண நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை மருத்துவ சங்கம், அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையானது, தற்போதைய ஸ்திரமற்ற நிலையை மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும் சாதாரண குடிமக்களின் நல்வாழ்வுக்கு தீங்கு விளைவிப்பதுடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என சங்கம் குறிப்பிட்டுள்ளது.

# கடமை செய்யத் தவறிய கான்ஸ்டபிள் பணிநீக்கம்

கடமையை சரிவர நிறைவேற்றத் தவறியமைக்காக அவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், நீதிபதிகளின் பாதுகாப்பு விவரங்களில் சரியான நேரத்தில் மற்றும் தேவையான திருத்தங்களைச் செய்ய 6 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கடுவெல நீதவானின் உத்தியோகபூர்வ இல்லத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும், நாட்டில் உள்ள அனைத்து நீதிபதிகள் மற்றும் நீதவான்களின் பாதுகாப்பை பலப்படுத்துமாறும் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ, பொலிஸ்மா அதிபருக்கு, சனிக்கிழமை (07) பணிப்புரை விடுத்திருந்தார். கடுவெல நீதவான் சனிமா விஜேபண்டாரவின் உத்தியோகபூர்வ இல்லத்தின் பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டமை தொடர்பில் நீதிச் சேவைகள் அமைப்பால் வெளியிடப்பட்ட தகவல் தொடர்பில் பிரதமரால் கவனம் செலுத்தப்பட்டதாக பிரதமர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டிருந்தது. மே 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்துக்கு அருகாமையில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுவதைத் தடுக்குமாறு பொலிஸாரின் கோரிக்கையை மே 4 ஆம் திகதி கடுவெல நீதவான் நிராகரித்திருந்தார். அன்றைய தினம், பாராளுமன்றத்திற்கு அருகாமையில் கைது செய்யப்பட்ட 13 இளைஞர் ஆர்ப்பாட்டக்காரர்களை சொந்த பிணையில் விடுவிக்கவும் நீதவான் உத்தரவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் பதாகைகளுடன் தேரர்கள் ஆர்ப்பாட்டம்

‘அரசாங்கத்தை விரட்டியடிப்போம்’ எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்தவர்கள்,

“உணவு இல்லை”, “பால்மா இல்லை”, “எரிபொருள் இல்லை”, “மின்சாரம் இல்லை”, “கொள்ளைக்கார பொருளாதார முறைமைக்கு எதிராக தொடர்ந்து போராடுவோம்”, “மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு கொடு”, “அடிக்காதே! அடிக்காதே! விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதே” உள்ளிட்ட கோஷங்களை எழுப்பினர்.

இந்நிலையில், இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்த பௌத்த தேரர்களில் பலரும், தமிழ் மொழில் எழுதப்பட்டிருந்த பதாகைகளை ஏந்தியிருந்தமை விசேட அம்சமாகும்.

# இன்று இறுதி

சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசாங்கத்துக்கும் பிரதமருக்கும் எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் கலந்துரையாடப்படும்.

அரசாங்கத்தில் இருந்து விலகி சுயாதீனமாக செயற்படும் 11 குழுக்களில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, எதிர்க்கட்சியின் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பதாக ஏற்கெனவே அறிவித்துள்ளது. இந்நிலையில், நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் ஆதரவளிப்பதற்கு தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை எப்போது விவாதத்துக்கு எடுப்பீர்கள். அதற்கான திகதியை அறிவிக்குமாறு, ஐக்கிய மக்கள் சக்தியினர் கடந்த 6ஆம் திகதியன்று கடுமையான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். அவையில் சபைக்கு வந்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, மேற்படி விவகாரம் தொடர்பில் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடியதன் பின்னரே தீர்மானம் எட்டப்படுமெனக் கூறிவிட்டு, சபையை எதிர்வரும் 17ஆம் திகதி வரைக்கும் ஒத்திவைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.எம்.எப்- இலங்கைக் குழு 15 நாள்கள் தொடர் பேச்சு

இதில், நிதியமைச்சர் அலி சப்ரி, மத்திய வங்கியின் ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர் என நிதியமைச்சு அறிவித்துள்ளது.

# ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆத்திரமூட்டுகின்றனர்

அமைச்சு வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்ததாவது; நாட்டின் தற்போதைய பொருளாதார, சமூக நெருக்கடி மற்றும் அமைதியின்மையுடன் கூடிய சூழலில் புத்திசாலித்தனத்துடனும் பொறுமையுடனும் நிர்வகிக்க உதவுமாறு முதலில் நாட்டின் அனைத்து பிரஜைகளிடமும் பாதுகாப்பு அமைச்சு அன்புடன் கேட்டுக்கொள்கிறது. ஜனநாயக கட்டமைப்புக்குள் அமைதியான முறையில் தமது போராட்டங்களையும் எதிர்ப்புகளையும் வெளிப்படுத்தும் இலங்கை மக்களின் ஜனநாயக உரிமையை நாம் அனைவரும் மதிக்கின்றோம் என்பதை குறிப்பிட வேண்டும். இருந்த போதிலும், விசேடமாக கடந்த சில நாள்களாக அமைதிப் போராட்டமாக நடைபெற்று வந்த போராட்டத்தை மாற்றி, மக்களின் ஜனநாயக உரிமைகள் மீறப்பட்டு, மக்களின் இயல்பு வாழ்க்கையை சீர்குலைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கும் விதத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடத்தப்படும் போராட்டங்கள், ஹர்த்தால்களால் பொதுவாக அனைவரும் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளோம் என்பதே யதார்த்தமாகும். நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கை பொருட்படுத்தாமல் ஆத்திரமூட்டும் வகையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் நடந்துகொள்வதுடன், சட்டம், ஒழுங்கைப் பேணுவதில் அர்ப்பணிப்புடன் செயற்படும் பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினரின் பணிகளுக்கு இடையூறு விளைவிப்பதாகவும், நாட்டின் பொதுச் சட்டத்தை அவமதிப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன் காரணமாக, சட்டத்தை மதிக்கும் நாட்டின் பெரும்பான்மையான மக்கள் தங்களின் அன்றாட வாழ்க்கையை கொண்டு செல்வதற்கு தேவையான அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்வதில் மிகுந்த சிரமத்துக்குள்ளாகின்றனர். இந்நிலையில், நாட்டின் தற்போதைய நிலைவரத்தை கருத்தில் கொண்டும், பொது அமைதியைப் பேணுவதற்கும், மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கும், சமூக ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் அரசியலமைப்பின் பிரகாரம் நாட்டின் அதிமேதகு ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 2ஆம் பிரிவுக்கமைய 2022 மே மாதம் 6 ஆம் திகதி நள்ளிரவு முதல் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கடினமான காலகட்டத்தில், நாட்டிலுள்ள பொறுப்புள்ள பிரஜைகள் என்ற வகையில் புத்திசாலித்தனத்துடனும் பொறுமையுடனும் செயற்பட வேண்டும் எனவும், இதுபோன்ற அவசரநிலைகளில் நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டி, அனைவரின் பாதுகாப்பிற்கு உறுதியளிக்கும் முப்படை மற்றும் பொலிஸாருக்கு உங்களது மேலான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு கேட்டுக் கொள்கின்றது.

# “ஜனாதிபதி நடந்துகொள்வதை பொறுத்தே தீர்மானிப்போம்”



இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடன் முன்னெடுக்கப்படும் இடைக்கால அரசாங்கம் தொடர்பிலான கலந்துரையாடலின்போது, ஜனாதிபதி எவ்வாறு நடந்துகொள்கிறார் என்பதைப் பொறுத்தே, எமது செயற்பாடுகள் அமையுமென ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இடைக்கால அரசாங்கம் தொடர்பில் எதிர்க்கட்சி தலைவருக்கு ஜனாதிபதி விடுத்துள்ள அறிவிப்பானது காலம் கடந்த ஒன்றாகும். தற்போது காலம் கடந்துவிட்டது. மக்கள் பெரும் துன்பங்களுடன் வாழ்கிறார்கள். இதனால் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தால் முழுநாடும் ஸ்தம்பிதமடைந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

காலம் கடந்தே ஜனாதிபதிக்கு ஞானம் பிறந்துள்ளது. நடுநிலையான தரப்பினரை வைத்துக்கொண்டு, அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு நாம் தயாராகவே இருக்கிறோம்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை காலந்தாழ்த்த முடியாது. 148 வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்தில் பெரும்பான்மையுடன் பிரதி சபாநாயகர் நியமிக்கப்பட்டிருந்தாலும் அவரும் வீடு செல்ல வேண்டிய நிலையே ஏற்பட்டுள்ளது என்றார்.

## மற்றுமொரு கப்பல் புதனன்று வருகிறது

எரிவாயுவை ஏற்றிவரும் 2 கப்பல்களுக்கான கட்டணம் இன்று (09) செலுத்தப்படுமென தெரிவித்துள்ள லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் விஜித்த ஹேரத், எரிவாயுவை ஏற்றிய கப்பலொன்று, எதிர்வரும் புதன்கிழமை(11) நாட்டை வந்தடையவுள்ளது என்றார்.

அதற்கமைய, தலா 3,500 மெட்ரிக் தொன் எரிவாயுவை ஏற்றிவந்த 2 கப்பல்களுக்கும் 7 மில்லியன் டொலர் செலுத்தப்படவுள்ளது.

இந்தக் கப்பல்கள் ஓமானிலிருந்து வருவதுடன், இவற்றில் ஒரு கப்பல் தற்போது மாலைதீவை வந்தடைந்துள்ளது என்று லிட்ரோ நிறுவன தலைவர் கூறினார்.

இதனிடையே, இந்திய கடன் வசதியின் அடிப்படையில் எரிவாயுவை கொள்வனவு செய்வதற்காக 120 மில்லியன் டொலரை பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனைத்தவிர, எரிவாயுவை கொள்வனவு செய்வதற்காக உலக வங்கியின் நிதி உதவியின் கீழ், 70 மில்லியன் டொலர் நாட்டுக்கு கிடைக்கவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய, நாட்டில் தற்போது எரிவாயுவுக்குக் காணப்படும் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.





### அவசரகால சட்டத்தை நீக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

மக்கள் விடுதலை முன்னணியினர் பல்வேறு அமைப்புகளுடன் இணைந்து, அவசரகாலச் சட்டத்தை நீக்கக்கோரி புத்தளம், நாத்தாண்டியா நகரில் நேற்று (08) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(படங்கள்: ஹிரான் பிரியங்கர)



தென் கடற்பரப்பில்

## ரூ.480 கோடி பெறுமதியான ஹெரோய்ன் மீட்பு

### 7 வெளிநாட்டவர்கள் கைது

தென்னிலங்கைக் கடற்பரப்பில், இலங்கை கடற்படை, பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகம் இணைந்து நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது, 480 கோடி ரூபாய் மதிப்புள்ள 240 கிலோ கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், ஏழு வெளிநாட்டு பிரஜைகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இருந்து தெற்காக இருந்து சுமார் 630 கடல்மைல் தொலைவில், இலங்கை கடற்படைக் கப்பல், இலங்கைக்கு தெற்கே சர்வதேச கடல் பகுதியில் சந்தேகத்துக்கிடமான வெளிநாட்டு மீன்பிடிக் கப்பல் ஒன்றை அவதானித்துள்ளது.

சந்தேகத்துக்கிடமான கப்பல் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, குறித்த கப்பலை நிறுத்துமாறு இலங்கை கடற்படை கேட்டுக் கொண்டுள்ளது.

எவ்வாறாயினும், சந்தேகத்துக்கிடமான கப்பல் சம்பவ இடத்தில் இருந்து தப்பிக்க முயற்சித்ததால், குறித்த கப்பலின் முன்பக்கத்தைக் குறிவைத்து இலங்கை கடற்படைக் கப்பலான ‘சயுரலா’ எச்சரிக்கை துப்பாக்கிச் சூடு நடத்தியது.

எச்சரிக்கைகளை பொருட்படுத்தாமல் கப்பல் தொடர்ந்து தப்பிச் சென்றதால், அதைத் துரத்திச் சென்ற கடற்படையினர் கப்பலைத் தடுத்து நிறுத்தி சோதனையிட்டபோது, 07 வெளிநாட்டு சந்தேக நபர்களையும், 240 கிலோ கிராம் ஹெரோய்ன் போதைப் பொருளையும் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருள், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை கரைக்குக் கொண்டு வந்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

போதைப்பொருளை நாட்டுக்குள் கொண்டு வருவதற்காக, பல நாள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் கப்பல் என்ற போர்வையில் சர்வதேச கடற்பரப்பில் நிறுத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

## பாதுகாப்பை நீக்கவோ குறைக்கவோ இல்லை

### பொலிஸ் தலைமையகம் விளக்கம்



நீதிமன்றங்கள், நீதியரசர்கள், நீதவான்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொலிஸ் பாதுகாப்பை நீக்கிக்கொள்வதற்கோ அல்லது குறைப்பதற்கோ எந்தவோர் ஆலோசனையும் வழங்கவில்லை என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

கடுவெல நீதவான் நீதிமன்ற நீதவானின் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளதாக சமூகவலைத்தளங்களில் வெளியான செய்திகள் தொடர்பில், பல அமைப்புகள் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளதைத் தொடர்ந்து பொலிஸார் இது தொடர்பில் ஆராய்ந்துள்ளனர்.

கடுவெல நீதவான், நீதிமன்றத்துக்கு வருகை தந்திருந்த நாள் முதல் அவரது பாதுகாப்புக்கும், அவரின் வீட்டின் பாதுகாப்புக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கடந்த 5ஆம் திகதி நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக நீதவான் சென்றிருந்த நிலையில், அவருடைய வீட்டில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், முறையாக எந்தவிதமான அறிவிப்புகளையும் பொலிஸாருக்கு வழங்காது, அங்கிருந்து சென்றிருக்கிறார்கள்.

இந்த விடயத்தில், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் மோசமான கண்காணிப்பும் காரணமெனவும் தெரிவிக்கும் பொலிஸ் தலைமையகம், இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது. இச்சம்பவத்துடன் தொடர்புடைய கான்ஸ்டபிள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

## முன்னாள் அமைச்சரின் வீட்டுக்கு முன் மலர்வளையம்



அங்குணுகொலபெலஸ்ஸில் உள்ள முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீரவின் வீட்டின் முன்பு, சிலர் மலர் வளையம் வைத்து நேற்று (08) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு அங்குணுகொலபெலஸ்ஸ நகரில் போராட்டத்தில் ஈடுபட்ட சிலர், முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீரவின் வீட்டுக்கு முன்பாக வந்து, போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, மலர் வளையம் வைத்தும் போராட்டக்காரர்கள் தங்களது எதிர்ப்பைக்காட்டினர். தற்போதைய அரசாங்கத்துக்கு மஹிந்த அமரவீர ஆதரவளிக்கக்கூடாது எனவும் போராட்டக்காரர்கள் கோஷமெழுப்பினர்.

## வீதிக்கு இறங்க முடியாத நிலை மஹிந்தவுக்கு ஏற்பட்டுவிட்டது



வீதிக்கு இறங்கி நடக்க முடியாத நிலை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஏற்பட்டுள்ளது. எனவே இனியும் அப்பதவியில் நீடிக்காது, இன்று நிச்சயமாகப் பிரதமர் பதவியிலிருந்து அவர் விலக வேண்டும் என பிரபல பௌத்த பிக்குவான கொட்டுவே பொடி ஹமதுருவோ தெரிவித்தார்.

பதவி ஆசை பிடித்தவர்களே, பிரதமர் பதவியில் மஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்து நீடிக்க வேண்டுமென கூறுகிறார்கள். அநுராதபுரத்துக்கு வழிபாடுகளுக்கு சென்றிருந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அங்கிருந்த மக்கள் பதவி விலக வேண்டுமென கூறுகிறார்கள்.

பிரதமர் பதவியிலிருந்து அவர் விலகவே வேண்டும்.

நாட்டின் பிரதமர் ஒருவருக்கு, வீதியில் இறங்கி நடக்க முடியாத நிலை காணப்படுமாக இருந்தால், வீதிக்கு இறங்கினால் அவருக்கு எதிராக மக்கள் போராடுவார்களாக இருந்தால் பிரதமர் பதவியில் அவர் தொடர்ந்து இருப்பதில் எவ்விதமான பிரயோசனம் இல்லை.

முழுநாட்டு மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். இப்படி ஒரு பிரதமர் பதவி உங்களுக்கு தேவையில்லை. எனவே பதவியிலிருந்து விலகுங்கள். இன்று நிச்சயமாக பிரதமர் பதவி விலகியே ஆக வேண்டும். நாட்டில் பாரதூரமான பிரச்சினைகள் காணப்படுகிற நிலையில், தொடர்ந்து பிரதமரால் அப்பதவியில் நீடித்திருக்க முடியாது என்றார்.



## சட்டத்தரணிகளுடனான சந்திப்பு வெற்றியளித்தது

### மைத்திரி தெரிவிப்பு; முன்னோக்கி நகர்வோம் என்கிறார்

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடன் நடைபெற்ற கலந்துரையாடல் வெற்றியடைந்துள்ளதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சட்டத்தரணிகள் சங்கத்துடனான கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவது, இடைக்கால அரசாங்கம், பாராளுமன்றம், தேர்தலை நடத்துவது அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்துடன் கலந்துரையாடினோம்.

சட்டத்தரணிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடல் வெற்றியடைந்துள்ளது. எதிர்காலத்திலும் பல அரசியல் கட்சிகளை இணைத்துக்கொண்டு, சட்டத்தரணிகளின் ஆலோசனைகளைப் பெற்று, நாட்டின் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வைப் பெறுவது என்பது தொடர்பில் கலந்துரையாட உள்ளதாகவும் தெரிவித்தார்.

சர்வக்கட்சி இடைக்கால அரசாங்கம் தொடர்பில் அரசாங்கத்துக்கு நாம் பல யோசனைகளை முன்வைத்துள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.







## காலி முகத்திடலில் காளிக்கு பூஜை

காலி முகத்திடல், ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக ‘கோட்டா கோ கம’வில் அரசாங்கத்துக்கு எதிராக பல்வேறு வடிவங்களிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

பறை அடித்து, உடுக்கு அடித்து, காளிக்கு பூஜை வழிபாடுகள் காலி முகத்திடலில், சனிக்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்டன. காளி, மாடன் வேடம் பூண்டிருந்தவர்கள், மருள் வந்து ஆடினர். இந்த அரசாங்கம் வீட்டுக்குப் போகவேண்டுமென சாபமிட்டதுடன், நாட்டுக்கும் மக்களுக்கும் விடிவுகாலம் பிறக்கவேண்டுமென அருள்பாலித்தனர். இந்நிலையில், சில வாரங்களுக்கு முன்பாக, காலிமுகத்திடலில் தொவில் அடித்து, பேய் விரட்டப்பட்டமை, பௌத்த தேரர்கள் ஆகம வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சோதனைச் சாவடிகளால்

# மக்கள் வேதனை

■ றொசேரியன் லெம்பர்ட்

மன்னார் மாவட்டத்தில் உள்ள சோதனைச் சாவடிகள் தொடர்பாக மன்னார் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன விஜயசேகரவுடன் மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் விசேட சந்திப்பு ஒன்றை மேற்கொண்டுள்ளது.

யுத்தம் முடிவடைந்து 13 ஆண்டுகள் கடந்துள்ள போதும், போதைப்பொருள் தடுப்பு எனும் போர்வையில், மன்னார் மாவட்டத்தில் 16 சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதாக இதன்போது சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது.

இந்தச் சந்திப்பு தொடர்பாக, நேற்று முன்தினம் (07) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன், "மன்னார் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ சோதனைச் சாவடிகளால், மக்கள் அடக்குமுறைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

"இவற்றை அகற்றுமாறு பலமுறை கோரிக்கை விடுத்தும் தீர்வின்றி தொடர்கின்றன. அரச உயர் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் எந்தத் தடையும் இன்றி பயணிப்பதால் சாமானிய மக்களின் அவல நிலை புரிவதில்லை.

"போதைப்பொருள் தடுப்பு எனும் காரணத்தை வைத்து, மன்னார் நுழைவாயிலில் உள்ள சோதனைச் சாவடி சாதாரண பொது மக்களின் அன்றாட வாழ்வியல் செயற்பாட்டில் பெரும் பின்னடைவை ஏற்படுத்துகின்றது.

"அத்துடன், அரச மற்றும் தனியார் பணியாளர்கள் குறித்த நேரத்துக்கு கடமைக்கு செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலையும் காணப்படுவதுடன், பொருட்களை இறக்கி ஏற்றுவதால் செலவு அதிகரிப்பதுடன், நேர விரயமும் ஏற்படுகிறது.

"பயணிகளைச் சோதனை செய்யும் இராணுவத்தினர், மிகவும் கடுமையாக நடந்து கொள்கிறார்கள்" போன்ற பல விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன.




இதன்போது, மாவட்ட கட்டளைத் தளபதி கருத்துத் தெரிவிக்கும் போது கூறியதாவது: "மன்னார் நுழைவாயில் சோதனைச் சாவடி பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் உள்ளதால், என்னால் அகற்ற முடியாது. ஆனால், சோதனைச் சாவடியில் சாதாரண பயணிகளின் போக்குவரத்தை இலகுபடுத்துவதுடன் அடையாள அட்டை பரிசோதனையை நிறுத்த முடியும்.

"பொருட்களை இறக்கி ஏற்றுவதற்கு மாற்று வழிகளை ஆராய முடியும். காலையில் வேலைக்கு செல்லும் பணியாளர்களை விரைந்து விடுவிப்பதுடன் தமிழ் பேசக்கூடிய இராணுவத்தினரை கடமையில் ஈடுபடுத்த முயல்கின்றேன்" எனவும் உறுதியளித்தார் என்றார்.

இச்சந்திப்பில் மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் அடிகளார், மன்னார் பிரஜைகள் குழுவின் செயலாளர் பத்திநாதன் உட்பட சில பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

அவசரகால சட்டம் அமல்படுத்தப்பட்டமை

# ராஜபக்ஷர்களை பாதுகாப்பதற்கே!

■ ஹஸ்பர்


ராஜபக்ஷர்களை பாதுகாப்பதற்கே அவசரகால சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளதாக, ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்று (08) அவர் கருத்துரைக்கையில்,

"நாட்டில் தற்போது அவசரகால சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு இருப்பது புதிய விடயமல்ல. தனது சகோதரரை பாதுகாக்க, அரசியலமைப்பை மாற்றிய இவர்களுக்கு, இதுவொரு விடயமல்ல. தனது குடும்பத்தைப் பாதுகாக்கவே, இந்த அரசியல் நாடகம் அரங்கேற்றப்படுகிறது.

"மக்களின் போராட்டத்தை திசை திருப்பவே பிரதமர் பதவி விலகுவார் என்ற செய்தியை பரப்பி நாடகமாடுகிறார்கள்.

"மக்களின் போராட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஆனாலும், ராஜபக்ஷர்கள் மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்காமல், தங்களின் அதிகாரத்தை தக்கவைக்கவே நினைக்கிறார்கள்.



"இடைக்கால அரசாங்கம் என்பது, ராஜபக்ஷர்களினதும் மொட்டுக் கட்சியினதும் கீழ், பிரதமர் பதவியை ஏற்பதை ஐக்கிய மக்கள் சக்தி விரும்பாது. மீண்டும் விமல், உதய கம்மன்பில போன்றவர்களுடன் ஆட்சியை கொண்டு செல்வதா என்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

"பாராளுமன்றத்தை கலைத்து, தேர்தலை நடத்துவது என்ற கோரிக்கையே, ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடகவுள்ளது" என்றார்.

கல்முனை புதிய உறுப்பினராக

# அப்துல்ழாஹிர் சத்தியப்பிரமாணம்



■ பி.எம்.எம்.ஏ.காதர்

கல்முனை மாநகர சபைக்கு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் புதிய உறுப்பினராக மருதமுனையைச் சேர்ந்த ஏ.எச்.அப்துல்ழாஹிர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

முன்னாள் மேல்நீதிமன்ற நீதிபதியும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் உப தலைவரும் (கிழக்கு வலயம்) சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.எஸ். எம்.ஜமீல் முன்னிலையில் அவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் கல்முனை மாநகர சபை உறுப்பினராகக் கடமையாற்றிய பி.எம். ஷிபான் இராஜினாமாச் செய்ததை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே, ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி முதல் அமலுக்கு வரும் வகையில் இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பில்

# கஞ்சாவுடன் ஒருவர் கைது



■ ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலில் பிரிவில் 400 கிராம் கஞ்சாவுடன் நபரொருவர் கைது செய்யப்படுள்ளார் என மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எருவில் கிராமத்தில் கிடைக்கப்பெற்ற தகவலொன்றின் அடிப்படையில், மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் வழிகாட்டலில் நேற்று முன்தினம் (07) இரவு மேற்கொள்ளப்பட சுற்றிவளைப்பின்போது, குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைதான நபர், களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நிர்வாண படங்களை பேஸ்புக்கில் பதிவேற்றப் போவதாக

# இளைஞனிடம் கப்பம் கோரிய குடும்பம்

## நால்வர் கைது

■ வி.நிதர்ஷன்

இளைஞன் ஒருவரை நிர்வாணமாக புகைப்படம், காணொளி எடுத்து, கப்பம் கேட்டு மிரட்டிய இளம் தம்பதி உள்ளிட்ட நால்வர், கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய், செல்வபுரத்தைச் சேர்ந்த இளம் கணவன், மனைவி, அவரது சகோதரர்கள் இருவரே, நேற்று முன்தினம் (07) கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, "சந்தேகநபர்கள் முகநூல் போலிக் கணக்கின் ஊடாக, பெண் ஒருவர் போன்று சாவகச்சேரியைச் சேர்ந்த இளைஞருடன் நட்பாகியுள்ளனர்.

பின்னர் இளைஞனை கோப்பாய்க்கு அழைத்து, தமது வீட்டின் அறையில் பூட்டி வைத்து, நிர்வாணமாக்கி சித்திரவதை செய்ததுடன் புகைப்படம், காணொளி எடுத்துள்ளனர்.

பின்னர் அவற்றை பேஸ்புக்கில் பதிவேற்றப் போவதாக அச்சுறுத்தி, இளைஞனிடம் 2 இலட்சம் ரூபாய் பணத்தை கோரியுள்ளனர். அச்சமடைந்த இளைஞன், வங்கிக் கணக்கில் அந்தப் பணத்தை கடந்த வாரம் வைப்பிலிட்டுள்ளார்.

இந்நிலையில், மீளவும் இந்த வாரம் இளைஞனிடம் 5 இலட்சம் ரூபாய் கோரியுள்ளனர்.

அதனால் அச்சமடைந்த இளைஞன், கோப்பாய் பொலிஸ் நிலையில் முறைப்பாடு செய்திருந்தார். அதனை விசாரித்த பொலிஸார், இளம் தம்பதி உள்ளிட்ட நால்வரை கைது செய்தனர்.

மண்ணெண்ணெய் கிடைக்காத

# மனவிரக்தியால் முதியவர் மரணம்

■ எம்.றொசாந்த்

இரண்டு தினங்களாக மண்ணெண்ணெய் வாங்குவதற்காக வரிசையில் காத்திருந்தும் மண்ணெணெய் கிடைக்காத நிலையில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், அளவெட்டி மத்தியை சேர்ந்த கந்தசாமி நடராசா (வயது 80) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது; குறித்த முதியவர், கடந்த வெள்ளிக்கிழமை (06) மண்ணெண்ணெய் வாங்குவதற்காக அளவெட்டி, மல்லாகம் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் நீண்ட வரிசையில் காத்திருந்துள்ளார்.

சில மணி நேரத்தில் மண்ணெண்ணெய் முடிந்து விட்டது என ஊழியர்கள் அறிவித்தனர். அதனால் அவருக்கு மண்ணெண்ணெய் கிடைக்காமலே வீடு திரும்பி இருந்தார்.

மறுநாளான நேற்று முன்தினம் (07) மீண்டும் மண்ணெண்ணெய் வாங்குவதற்காக சென்று நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்துள்ளார். அவர் அருகில் சென்றதும் மண்ணெண்ணெய் முடிவடைந்து விட்டது என ஊழியர்கள் தெரிவித்தனர்.

அதனால் கடும் மனவிரக்தியுடன் வீடு திரும்பியவர், மனைவியிடம் இன்றும் தன்னால் மண்ணெண்ணெய் வாங்க முடியவில்லை என கவலையுடன் கூறி படுத்தவர், சில நிமிடங்களிலையே படுக்கையிலையே உயிரிழந்துள்ளார்.

இந்த முதியவரின் மரணம், அப்பகுதி மக்களிடம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



எதிர்ப்புகளை மீறி

# தையிட்டி விகாரை கட்டுமான பணிகள் இராணுவ தளபதி கள விஜயம்

■ எம்.றொசாந்த்

வலி.வடக்கு தையிட்டியிலுள்ள தனியார் காணியொன்றில் அமைக்கப்பட்ட திஸ்ஸ ரஜமஹா விஹாரைக்கு இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, நேற்று (08) கள விஜயம் மேற்கொண்டார்.

பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் படைத் தலைமையகத்துக்கு நேற்றுக் காலை வருகை இராணுவத் தளபதி, மேற்படி விஹாரைக்குச் சென்று கட்டுமானப் பணிகளை நேரில் ஆராய்ந்தார்.

வலி.வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விஹாரையை அமைப்பதற்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டதுடன், கட்டுமானப் பணிகளை அனுமதிப்பதில்லை என்று தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

எனினும்,கடும் எதிர்ப்பையும் மீறி காங்கேசன்துறை திஸ்ஸ ரஜமஹா விஹாரை அமைக்க இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவால் அடிக்கல் நாடப்பட்டது.

பட்டப்பகலில்

# வீடு புகுந்து திருட்டு

■ செந்துரன் பிரதீபன்

உரும்பிராய் வடக்கு பகுதியில் 08 இலட்சம் ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய 06 பவுன் தங்க நகை திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டில் ஆட்கள் இருந்தவேளை, முன் கதவைத் திறந்து உள்ளே வந்த திருடர்கள், அலமாரியில் வைக்கப்பட்டிருந்த நகையைத் திருடிச் சென்றுள்ளனர்.

இதன்போது குடும்பத் தலைவி சமையல் வேலையில் ஈடுபட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# போராட்டம் இலக்கை நோக்கி நகருகின்றதா?

■ ஹஸ்பர்

நாட்டில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்டங்கள், சரியான இலக்கை நோக்கி நகருகின்றனவா என கிண்ணியா நகர சபை உறுப்பினர் எம். எம் மஹ்தி சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று (08) அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே, இவ்வாறு சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

அத்துடன், இந்தப் போராட்டங்களுக்குக் காரணமானவர்கள் யார் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது; நல்லாட்சிக் காலத்தில், மொட்டுக் கட்சியே மத்திய வங்கி ஊழல் குற்றச்சாட்டை சுமத்தியது. எந்தவோர் அடிப்படையும் இன்றி இன, மத வாதங்களைத் தூண்டி, குழப்பங்களையும் அழிவுகளையும் ஏற்படுத்தியது.

"ஆனால், மொட்டின் உண்மை முகத்தை அறியாதவர்கள் 69 இலட்சம் வாக்குகளையும் வழங்கினார்கள். மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு 20 ஆவது திருத்தத்தையும் அவர்களே நிறைவேற்றினர்.

"அதே மொட்டுக் கட்சி, மத்திய வங்கி மோசடிக்கு எதிராக எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. திகன, அம்பாறை, ஏப்ரல் 21 என பல்வேறு தாக்குதல்களுக்கு காரணமானவர்களைக் கூட கண்டுபிடிக்கவில்லை.

> "மொட்டுக் கட்சியே எந்தவோர் அடிப்படையும் இன்றி இன, மத வாதங்களைத் தூண்டி அழிவுகளை ஏற்படுத்தியது

அதேநேரம் பாராளுமன்ற சூழலில் தற்காலத்தில் நடைபெற்ற சில சம்பவங்கள், தற்போதைய ஆட்சியை உண்டாக்கியவர்கள் யார்? நாட்டின் ஸ்திரத் தன்மையையும் பொருளாதாரத்தையும் வீழ்த்தியது யார்? அனைத்துக்கும் காரணமானவர்களுக்கு எதிராக குரலெழுப்பும் எதிர்க்கட்சியினரையும் போராட்டக்காரர்கள் இலக்கு வைத்தால், அடுத்து எதை சாதிக்கப் போகிறோம்? உள்ளிட்ட கேள்விகள் இந்த அறிக்கையின் ஊடாக எழுப்பப்பட்டுள்ளன.



# மீன் தாக்கி மீனவர் உயிரிழப்பு



■ பாறுக் ஷிஹான், சகா

அம்பாறை, காரைதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பாரிய ஜெலி மீனிடம் அகப்பட்டு, தாக்குதலுக்கு உள்ளான மீனவர், நேற்று (08) காலை உயிரிழந்துள்ளார்.

காரைதீவு 8ஆம் பிரிவைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சுப்ரமணியம் ஜெயரஞ்சன் (வயது -51) எனும் மீனவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சக மீனவர்களுடன் இணைந்து மீன்பிடியில் ஈடுபட்ட பின்னர், கடற்கரையில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் படகில் இருந்து கடலில் இறங்கி, வலையை சரி செய்ய முயற்சித்துள்ளார்.

இவ்வாறு வலையை சரி செய்ய கடலுக்குள் இறங்கிய மீனவரை, ஜெலி மீன் தாக்கியுள்ளது. அதனையடுத்து, சக மீனவர்களால் மீட்கப்பட்டு, காரைதீவு பிரதேச வைத்தியசாலையில் மீனவர் அனுமதிக்கப்பட்ட போதும், அவர் ஏற்கெனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீனவரின் நெஞ்சுப்பகுதியில் தாக்குதலுக்குள்ளான அடையாளங்கள் காணப்பட்டன. உயிரிழந்த மீனவரின் சடலம், உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

## போலி வாகன சாரதி அனுமதிப்பத்திரங்களுடன்
# கண்டியில் ஒருவர் கைது

சேஹ்ன் செனவிரத்ன

வாகன சாரதி அனுமதிப்பத்திரங்களை போலியாகத் தயாரித்தவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என, தெல்தெனிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரிடமிருந்து போலி சாரதி அனுமதிப்பத்திரங்கள் 20 கைப்பற்றப்பட்டுள்ளன. கண்டி மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரின் இறப்பர் முத்திரையை ஒத்த போலி இறப்பர் முத்திரை, ஆவணங்கள் உள்ளிட்ட பொருட்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு போலியாகத் தயாரிக்கப்படும் அனுமதிப்பத்திரம் ஒன்று 20,000 ரூபாய் முதல் 25,000 ரூபாய் வரைக்கும் விநியோகிக்கப்பட்டு வந்துள்ளமை பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன் சந்தேகநபருடன் நெருங்கிய தொடர்பிலிருந்த கண்டி மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் அலுவலகத்தில் பணிபுரியும் சிலர் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## மதில் உடைந்து விழுந்து
# பெண்ணொருவர் பலி

தனது வீட்டின் மதில் இடிந்து விழுந்ததில், பெண்ணொருவர் உயிரிழந்த சம்பவம் கம்பளை பகுதியில் பதிவாகியுள்ளது. இவ்வாறு உயிரிழந்தவர் 72 வயதானவர் என்று கம்பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த பெண், மதிலுக்கு அருகிலிருந்த வாழை இலையை வெட்டிய போது, வாழை மரம் முறிந்து மதில் மீது விழுந்த நிலையில், மதில் உடைந்து அப்பெண்ணின் மீது விழுந்துள்ளது.

இதையடுத்து காயமடைந்த பெண், கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# “முடியாத யுகம்”

## செந்தில் எடுத்துரைப்பு: நாட்டை மேலும் நெருக்கடிக்குள் தள்ள வேண்டாமென எச்சரிக்கை



பொருளாதார சிக்கலிலிருந்து மீள்வதற்கான உதவிகளை சர்வதேச நாடுகளிடம் இலங்கை கோரிக்கொண்டிருக்கும் தருணத்தில், அவசரகாலச் சட்டம் அமல்படுத்தப்படுவதானது நாட்டில் ஒரு சரியான சட்டம் ஒழுங்கு இல்லை என்பதை அரசாங்கம் வெளிப்படுத்துகின்றது என இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் வலியுறுத்தியுள்ளதாவது:

நாட்டில் யுத்தம் முடிவுக்கு வந்த பிறகு, பல சர்வதேச நாடுகளால் அவசரக்கால சட்டம் இலங்கையில் தொடரக் கூடாது என்றும்,அது ஜனநாயகத்துக்கு எதிரானது என்றும் வலியுறுத்தப்பட்டு வந்தது. அதன் காரணமாக, கடந்த காலங்களில் அவை மீளப்பெறப்பட்டன.

எமது நாடு, மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் வரிசையில் இருந்து எரிபொருள், அத்தியாவசியப் பொருட்கள், சமையல் எரிவாயு உட்பட ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத யுகமொன்றே உருவாகியுள்ளது.

எதிர்வரும் சில மாதங்களில், இந்த நெருக்கடிகள் மேலும் அதிகரிக்குமென பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இத்தருணத்தில், உலக வங்கி உட்பட பல சர்வதேச நாடுகளிடம் பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கான தீர்வுகளை இலங்கை உதவி கோரிவருகிறது.

இந்த இக்கட்டான சூழ்நிலையில், அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி அமல்படுத்தி உள்ளமையால், நாட்டின் மீது உள்ள அபிப்பிராயத்தை சர்வதேச நாடுகளுக்கு மத்தியில் இழக்க நேரிடும். இதனால், எமது நாட்டுக்கு சர்வதேச ரீதியாகக் கிடைக்கும் அனைத்து உதவிகளும் தாமதமாகும் அபாயமும் எழுந்துள்ளது.

இந்த அவசரக்காலநிலை பிரகடனத்தால் இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை, முற்றிலும் குறைவடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் டொலர் தட்டுப்பாடு மேலும் அதிகரிக்கும்.

எனவே, அரசு எதிர்காலத்தில் இவ்வாறான முடிவுகளை எடுக்கும் பொழுது, பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து கட்சிகள், சிவில் அமைப்பினர் ஆகியோருடன் கலந்து ஆலோசித்தே முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.



## ஹட்டனில் பல வாரங்களின் பின்னர்
# சுப்பர் டீசல் விநியோகம்

ரஞ்சித்

ஹட்டன் நகரிலுள்ள ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு பல வாரங்களின் பின்னர் நேற்று (08) சுப்பர் டீசல் விநியோகிக்கப்பட்ட நிலையில், அதனைப் பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் சாரதிகள் காத்துக்கிடந்தனர்.

குறித்த எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு 6,600 லீற்றர் டீசலே வழங்கப்பட்டிருந்த நிலையில், வரிசைகளில் காத்திருந்தவர்களுக்கு எவ்வித மட்டுப்பாடுகளும் இன்றி டீசலை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன்போது போத்தல்களில் டீசலை கொள்வனவு செய்ய சிலர் வருகை தந்தமையால் அங்கு சிறிது அமைதியின்மை ஏற்பட்டது. எனினும் ஹட்டன் பொலிஸார் தலையிட்டு நிலைமையைச் சுமூகமாக்கினர்.

இதேவேளை, பஸ்களுக்கு சுப்பர் டீசலை பயன்படுத்தி சேவையில் ஈடுபடுவது, பாரிய நட்டம் என்றும் பஸ் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

# ஹட்டனில் தனியார் பஸ்கள் ஓடவில்லை

ரஞ்சித் ராஜபக்ஷ



ஹட்டன் நகரிலுள்ள சிபெட்கோ, ஐ.ஓ.சி ஆகிய எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு, கடந்த சில தினங்களாக டீசல் விநியோகிக்காமை காரணமாக, ஹட்டன் தனியார் பஸ் தரிப்பிடத்திலிருந்து குறுகிய மற்றும் தூர இடங்களுக்கு தினமும் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் பல சேவையிலிருந்து விலகியுள்ளன.

இதற்கமைய, ஹட்டன்-நுவரெலியா, ஹட்டன்-கொழும்பு, ஹட்டன்-கண்டி உள்ளிட்ட தூர இடங்களுக்கான சேவைகளும் பொகவந்தலாவை, தலவாக்கலை, மஸ்கெலிய உள்ளிட்ட குறுகிய இடங்களுக்கான சேவைகளும் நேற்று (08) இடைநிறுத்தப்பட்டிருந்தது.

சில தனியார் பஸ்கள், எரிபொருளுக்காக பல நாள்களாக எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ஹட்டனிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் போத்தல்கள், கேன்களில் எரிபொருள் விநியோகிக்கப்படமாட்டாது என அறிவிப்பு பலகைகள் தொங்க விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கார் சிக்கியது; தப்பியது பால்

ரஞ்சித் ராஜபக்ஷ



அதிக வேகத்துடன் பயணித்த காரொன்று, முன்னால் சென்று கொண்டிருந்த பால் கொள்கலன் பவுசரின் பின்புறமாக மோதியதால், கார் பலத்த சேதமடைந்துள்ளது.

ஹட்டன்- கொழும்பு பிரதான வீதியின் ரொசல்ல பகுதியில் இந்த விபத்து நேற்றுமுன்தினம் (7) காலை 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து ஹட்டனுக்கு சென்று கொண்டிருந்த கொள்கலன் பவுசருக்குப் பின்பக்கத்தில் களுத்துறையிலிருந்து ஹட்டன் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த கார் மோதியுள்ளது.

இதன்போது, குறித்த காரில் சிறு குழந்தை உள்ளிட்ட மூவர் இருந்துள்ளதுடன், விபத்தால் எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என வட்டவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கார் சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை கலக்கமே இந்த விபத்துக்கு காரணம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




## சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள்
# தொழிலாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்த கூடாது

மொஹொமட் ஆஸிக்

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெறும் போது, பெருந்தோட்டத்துறைத் தொழிலாளர்கள் உட்பட நாட்டில் உள்ள ஏனைய தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில், சர்வதேச நாணய நிதியம் ஏதும் நிபந்தனைகளை முன் வைத்தால், அதனை ஏற்றுக் கொள்ளக் கூடாது என இலங்கை தொழிலாளர் செங்கொடிச்சங்கம், இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடுவது தொடர்பாக, இலங்கை தொழிலாளர் செங்கொடிச் சங்கத்தினர், கண்டியில் நடத்திய ஊடக சந்திப்பில் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆனந்தி சிவசுப்ரமணியம் இதைத் தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு சர்வதே நாணய நிதியம் (ஐ.எம்.எப்) மட்டும் தான் தீர்வு என்ற நிலைப்பாட்டை மாற்றி, வேறு மாற்று வழிகளைப் பற்றியும் சிந்திக்க முடியும். ஏனெனில், எப்போதும் ஒரு நிறுவனம் கடன் அல்லது உதவிகள் வழங்கும் போது, நிபந்தனைகளை விதிப்பதுண்டு.

அந்த அடிப்படையில், சர்வதேச நாணய நிதியமும் நிபந்தனைகளை விதிப்பது சாதாரண விடயம். அது தொழிலாளர் வர்க்கத்தைப் பாதிக்கும் வகையில் அமையக் கூடாது. அப்படி தொழிலாளர்களைப் பாதிக்கும் வகையில் நிபந்தனைகள் விதிக்கப்படின், அவற்றை ஏற்றுக் கொள்ளக்கூடாது.

மாறாக, அத்தகைய நிபந்தளைகள் முன்வைக்கப்பட்டால் தொழில் சங்கங்களுடன் கலந்துரையாட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## அமித் வீரசிங்கவின் ஜீப்பை
# உடைத்த அரசியல்வாதியின் ஆதரவாளர்கள்

சேஹ்ன் செனவிரத்ன



‘மஹாசோன்’ அமைப்பின் பிரதானியான அமித் வீரசிங்க பயணித்த ஜீப்பின் மீது, பிரபல அரசியல்வாதியின் ஆதரவாளர்கள் நடத்திய தாக்குதலில், அந்த ஜீப் சேதமடைந்துள்ளது என கண்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அமித் வீரசிங்கவும் அவரது குடும்பத்தினரும் இந்த மாதம் 5ஆம் திகதி இரவு, கண்டி நகரில் காத்திருந்த போது, அமித் வீரசிங்கவுக்கும் மற்றுமொரு தரப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. வாக்குவாதத்தில் ஈடுபட்ட குழுவே, ஜீப்பின் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக அறியமுடிகின்றது.

இதனையடுத்து, அமித் வீரசிங்க பயணித்த ஜீப்பை பின்தொடர்ந்த சந்தேகநபர்கள்,லேவெல்ல பகுதியில் வைத்து, வீதியின் குறுக்காக வாகனத்தை நிறுத்தி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் அமித் வீரசிங்கவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. எனினும், வாகனம் சேதமடைந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டு, கண்டி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து, அவர்களை இந்த மாதம் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் ஸ்ரீநித் விஜேசேகர உத்தரவிட்டுள்ளார்.



## சாமிமலையில் கோவிலை உடைத்து
# நகைகள் கொள்ளை

செ.தி.பெருமாள்

சாமிமலை, மல்லியப்பு தோட்ட அம்மன் கோவில் உடைக்கப்பட்டு, தங்க நகைகள், உண்டியல் திருடப்பட்டுள்ளமை தொடர்பில், மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் (7) இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கோவில் நிர்வாகத்தால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனினும், உண்டியலில் இருந்த பணத்தை எடுத்து விட்டு, உண்டியலை கோவிலுக்கு அருகில் வீசி சென்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பில் மஸ்கெலியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.








# Ekalvi நிறுவனத்தின் அன்பளிப்பு...

மலையகத்தில் தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளுக்கு smart TV உடன் mini PC போன்ற நவீன தொழில்நுட்ப சாதனங்களை ekalvi நிறுவகம் அன்பளிப்பு செய்தது. வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர்ந்தவர்களின் உதவியுடன் இந்த உபரணங்கள் பத்தனை ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரியின் கணினி தொழில்நுட்ப வள நிலையத்தில் நேற்று முன்தினம் (07) வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், நுவரெலியா வலயக் கல்வி காரியாலயத்தில் அபிவிருத்திக்கு பொறுப்பான உதவி கல்விப் பணிப்பாளர், நுவரெலியா கல்வி வலயத்தின் கோட்டம் இரண்டு, கொத்மலை, ஹட்டன் வலயங்களின் கோட்டக்கல்வி பணிப்பாளர்கள், ஸ்ரீ பாத கல்வியல் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி எஸ். முரளிதரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# முரண்டு பிடிக்கும் ஜனாதிபதியும் எப்போதும் முண்டியடிக்கும் மக்களும்

ஒன்றை நிறைவேற்றுவதன் ஊடாக, பல்வேறு சவால்களுக்கும் நெருக்குவாரங்களுக்கும் முகங்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமாயின், அழுத்தங்களுக்கு முகங்கொடுத்துக்கொண்டு அமைதியாக இருப்பதே புத்திசாலித்தனமாகும். இரும்புக்கரம் கொண்டு அடக்கியாள முயலப்படுமாயின், அது பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும்.

நாட்டில் ஸ்திரமான ஆட்சியொன்று இல்லை. இன்று பதவியேற்பவர், நாளை விலகிக்கொள்கின்றார். ஒருவரின் மீது, பல அமைச்சுகளின் பொறுப்புகள், சுமையாகத் திணிக்கப்படுகின்றன. பொருளாதாரத்தை தூக்கியெழுப்ப முடியாத வகையில், கையிருப்புகள் கரைந்துவிட்டன.

இவ்வாறான நிலையில்தான், அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள், பல்வேறு வடிவங்களில் முன்னெடுக்கப்படுகின்றன. அழுத்தங்களின் வேகமும் அதிகரித்துள்ளது. பொலிஸார் நீதிமன்றத்தை நாடுகின்ற போதெல்லாம், ஆர்ப்பாட்டங்களைத் தடுப்பதற்கான உத்தரவைப் பிறப்பிப்பதற்கு, நீதிபதிகள் மறுத்துவிடுகின்றனர்.

இந்நிலையில்தான், கடுவலை நீதவான் நீதிமன்ற நீதவானுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பை பொலிஸார் விலக்கிக் கொண்டுள்ளனர். எனினும், அந்த நீதவான் உள்ளிட்ட நாட்டிலிருக்கும் சகல நீதவான்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பொலிஸாருக்கு பணித்துள்ளார்.

சிலவேளைகளில், எவ்வித காரணங்களும் இன்றியே, சில சட்டங்களை அதிரடியாக அமல்படுத்தும் அரசாங்கம், உள்ளூரிலிருந்து மட்டுமன்றி சர்வதேச ரீதியிலிருந்து எழுப்பப்படும் கண்டனங்களை அடுத்து, அவசர, அவசரமாக வாபஸ் பெற்றுக்கொண்டுவிடும். மிரிஹானையில் உள்ள ஜனாதிபதியின் வாசஸ்தலத்துக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை அடுத்தும், அடுத்தடுத்த நாள்களில் செய்யப்பட்ட போராட்டங்களைத் தடுக்கும் வகையிலும் அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது; பின்னர் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டது.

எனினும், வெள்ளிக்கிழமை (06) மீண்டும் அவசரகாலச்சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதற்கும் 'சர்வதேச சமூகம்' கடுமையான கண்டனத்தை தெரிவித்து, ஜனநாயக ரீதியிலான போராட்டங்களை அடக்குவதற்கு முயல வேண்டாமென வலியுறுத்தியுள்ளது.

பொருளாதார ரீதியில், நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருக்கும் வேளையில், உதவிகளை வழங்குவதற்குக் காத்திருக்கும் அமைப்புகளும், அவசர காலச்சட்டம் அமலில் இருப்பதால், நாட்டின் பாதுகாப்பு கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்பதை காரணமாகக் காண்பித்து, உதவிகள் செய்வதிலிருந்து விலகக்கூடும்.

எனினும், பொது அமைதியைப் பேணுவதற்கும் மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கும், அரசியலமைப்பின் பிரகாரமே, அவசரக் காலச்சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது என அரசாங்கம் விளக்கமளித்துள்ளது.

இந்த விளக்கம், ஆளும் தரப்புக்கு மனத்திருப்தியைக் கொடுக்கலாம். எனினும், சர்வதேசம் ஏற்றுக்கொள்ளாது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். ஜனநாயக போராட்டங்களை அடக்கியாள முயல்வது, பாரிய பின்விளைவுகளுக்கு வழிசமைக்கும்.

அதேபோல், "என்னை யாராலும் விரட்ட முடியாது; போகவும் மாட்டேன்" என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அவருக்கு காலமிருக்கிறது.

எனினும், வரிசையில் நின்றுகொண்டு, முண்டியடித்துக் கொண்டிருக்க, மக்களுக்கு இனிமேலும் முடியாது என்பதை கவனத்தில் கொள்க!




## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

நம்பிக்கைகளைப் பாதுகாத்து, அழியாமல் மனஉறுதியுடன் வைத்திருங்கள். நல்லவைகளை நெஞ்சத்தில் இருத்தி உரமேற்றுங்கள்.

முன்னேறும் பாதையில், நீங்களே உங்களை வழிநடத்திச் செல்லுங்கள். கண்டவர் பேச்சுகளை நம்ப வேண்டிய அவசியமில்லை. கேட்க வேண்டிய பெரியோரிடமே கேட்டு அறியவேண்டும். போராட்டமான வாழ்க்கை இதுவெனக் கலங்குதல் கூடாது.

எதிர்மறை கருத்துகளை சிலர் அள்ளி வீசுவார்கள்; கண்டுகொள்ள வேண்டாம். எங்களுக்குள் முடிவு எடுக்கும் திறமை உண்டு. எங்களால் உருவாக்கும் திறமை மிகு கருமங்களை, பிறரால் தடுக்க முடியாது.

உங்களை நீங்களே நிர்வகித்துக் கொள்க! உங்களை நீங்களே ஆள்பவராவீர்! உங்களது செயல்களும் உங்களுக்கேயானவை!

எந்த நற்செயல்களையும் செய்திட கடவுள் ஆசீகள் உண்டு. உங்களுக்குள் பிரவாகிக்கின்ற மகிழ்ச்சி நிலையே, உங்களுக்குள் ஒளியூட்டும்.

தற்செயலான இடையூறுகள் சாதாரணமானவை; நிரந்தரமானவை அல்ல. புரிந்து கொள்ளுங்கள் - உருவாக்குபவன் படைப்பாளி.

பல கருமங்களை உங்கள் மூலம் ஒழுங்காகச் செய்ய, இறைவன் ஆணையிட்டுள்ளான். தொடர்ந்து கருமம் ஆற்றுங்கள்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

முட்டுச்சந்தில் இலங்கை அரசியல்:

# போக மறுக்கும் ராஜபக்ஷர்கள்




என்.கே. அஷோக்பரன்
Twitter: @nkashokbharan


பாராளுமன்றம் 17ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், கோட்டா மீண்டும் அவசரகால நிலையை பிரகடனம் செய்துள்ளார்.

மக்கள் போராட்டம், மிக அமைதியான வழியில் இடம்பெற்று வருகின்ற நிலையில், மக்கள் போராட்டத்தில் வன்முறை என்பது, பொலிஸாரால் மட்டுமே இழைக்கப்பட்டுக் கொண்டிருக்கிற நிலையில், அவசரகால நிலையின் தேவை என்ன என்ற கேள்வி எழுந்துள்ளது. மேலும், கோட்டா தன்னுடைய அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கிறாரோ என்ற கேள்வியும் எழுகிறது.

'கோ ஹோம் கோட்டா' (கோட்டா வீட்டுக்குப் போ) போராட்டம், மிரிஹானையில் கோட்டாவின் வீட்டினருகில் தொடங்கிய நாள்களில், கோட்டா ஒருமுறை அவசரகால நிலையைப் பிரகடனம் செய்து, சமூக ஊடகங்களையும் தடைசெய்திருந்தார். அதற்கு கடுமையான எதிர்ப்பு உள்ளூரிலும், சர்வதேசத்திலும் எழவே, குறித்த அவசரகால நிலைப் பிரகடனத்துக்கு 14 நாள்களுக்குள் கட்டாயம் பெறப்படவேண்டிய பாராளுமன்ற அங்கிகாரம் எங்கே கிடைக்காது போய்விடுமோ என்ற அச்சத்திலோ என்னவோ கோட்டா, அந்த அவசரகால நிலைப் பிரகடனத்தை மீளப்பெற்றுக்கொண்டார்.

குறித்த அவசரகால நிலைப் பிரகடனத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை விசாரிக்க, உயர்நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது. இந்தநிலையில், மீண்டும் ஒருமுறை அவசரகால நிலையை, கோட்டா பிரகடனம் செய்திருக்கிறார்.

அவசரகால நிலையைப் பிரகடனம் செய்தபின்னர், அதற்கு பாராளுமன்றம் அங்கிகாரம் வழங்காவிட்டால், 30 நாள்களுக்கு மீண்டும் அவசரகால நிலையைப் பிரகடனம் செய்ய முடியாது என்று அரசியலமைப்பு சொல்கிறது. முதல் முறை, அவசரகாலநிலையை கோட்டா பிரகடனம் செய்ததற்கு, பாராளுமன்றத்தில் அங்கிகாரம் பெறப்படவில்லை (அதனை அவர் சில நாள்களில் மீளப்பெற்றுக்கொண்டிருந்தார்).

இந்த நிலையில், 30 நாள்களுக்குள் மீண்டும் செய்யப்பட்ட இந்த அவசரகாலநிலைப் பிரகடனம், செல்லுபடியானதா என்பது வலிதுள்ளதொரு கேள்வி.

மேலும், அவசரகாலநிலையை பொதுப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காகவன்றி, வேறு காரணங்களுக்காக பிரகடனம் செய்ய முடியாது. ஆகவே, அதிலுள்ள காரணங்களுக்காகத்தானா இந்த அவசரகாலநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது என்பதும் இன்னொரு முக்கிய கேள்வி. இந்தச் சட்டச் சிக்கல்கள் ஒருபுறமிருக்க, இன்றைய அரசியல் நிலையை அவதானிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது.

மஹிந்தவை பதவி விலகச் சொல்லி கோட்டா கேட்பதும், மஹிந்த மறுப்பதும் ஒரு சலிப்பான விளையாட்டாக மாறியிருக்கிறது. மக்கள், இருவரையுமே போகச் சொல்லிக் கேட்டுக்கொண்டிருக்கும் போது, இருவரும் இந்த விளையாட்டை விளையாடிக் கொண்டிருப்பது, மக்களை வெறுப்பூட்டுவதாக அமைந்திருக்கிறது.

மறுபுறத்தில், திராணியற்ற எதிர்க்கட்சி, அரசியல் நாடகங்களில் காட்டும் அக்கறையை, யதார்த்த அரசியல் நகர்வுகளில் காட்டத்தவறி வருகிறது என்பதை, பிரதி சபாநாயகர் தெரிவு சுட்டிக்காட்டி இருக்கிறது.

பிரதி சபாநாயகராக இருந்த ரஞ்சித் சியம்பலாபிட்டிய, தனது பதவியை இராஜினாமாச் செய்திருந்தார். முதலில் அந்த இராஜினாமாவை ஏற்றுக்கொள்ளாத ஜனாதிபதி, பின்னர் அதனை ஏற்றிருந்தார். இந்தநிலையில், அரசாங்கத்திலிருந்து விலகி, சுயாதீனமாகச் செயற்படுவதாக அறிவித்திருந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள், மீண்டும் பிரதி சபாநாயகர் பதவிக்கு ரஞ்சித் சியம்பலாபிட்டியவை முன்மொழிந்திருந்தனர். அரசாங்கம் ஒருவரையும் முன்மொழியவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் பிரதான எதிர்க்கட்சி, ரஞ்சித் சியம்பலாபிட்டியவை ஆதரிக்க எந்தத் தடையும் இருக்கவில்லை.

அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமாக செயற்படுவதாக அறிவித்திருந்த பாராளுமன்ற உறுப்பினர்களோடு இணைந்து பயணிப்பதோடு, அரசாங்கத்திலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களைத் தம்பக்கம் ஈர்த்தால் மட்டுமே எதிர்க்கட்சியால் தாம் எண்ணும் காரியங்களை, அது நம்பிக்கையில்லாத் தீர்மானமாக இருக்கலாம், அல்லது 21ஆவது திருத்த சட்டமூலமாக இருக்கலாம், நிறைவேற்ற முடியும்.

ஆகவே, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, ரஞ்சித் சியம்பலாபிட்டியவை தமது வேட்பாளராக நிறுத்தி, அரசாங்கத்திலிருந்து விலகி, சுயாதீனமாகச் செயற்படுவதாக அறிவித்திருந்த பாராளுமன்ற உறுப்பினர்களோடு இணைந்து பயணித்திருக்கலாம். ஆனால், அவர்கள் சாத்தியமான அரசியலை செய்ய விரும்பவில்லை போலும்!

ரஞ்சித் சியம்பலாபிட்டியவின் பெயர் முன்மொழியப்பட்டதுமே, ஆளுந்தரப்பு, தமது ஆதரவை ரஞ்சித் சியம்பலாபிட்டியவுக்கு வழங்குவதாக அறிவித்திருந்தது. உடனடியாக பிரதான எதிர்க்கட்சி, இம்தியாஸ் பாகீர் மாக்காரை பிரதிசபாநாயகர் பதவிக்கு முன்மொழிந்தது. முடிவில் 148 வாக்குகள் பெற்று ரஞ்சித் சியம்பலாபிட்டிய வெற்றிபெற்றார்.

அரசாங்கத்தின் ஆதரவோடு பெற்ற வெற்றி, ரஞ்சித் சியம்பலாபிட்டியவுக்கு அரசியல் ரீதியில் சாதகமானதொன்றல்ல. அதைப் புரிந்துகொண்டு ரஞ்சித் சியம்பலாபிட்டிய மீண்டும் பதவி விலகல் கடிதத்தை வழங்கியிருந்தார். பாராளுமன்றத்தின் ஒரு நாள் வீணானதுதான் மிச்சம்.

ஆனால், இன்றெழுந்துள்ள முக்கிய கேள்வி, வெறும் 65 வாக்குகளை மட்டுமே வைத்துக்கொண்டு, இந்த எதிர்க்கட்சி என்னத்தைச் சாதிக்கப் போகிறது என்பதுதான்?

அரசியல் என்பது வெறும் இலட்சிவாதம், வாய்ப்பேச்சு, அரசியல் நாடகங்கள் அல்ல. எடுத்துக்கொண்ட காரியத்தை வெற்றியடையச் செய்யாத எந்த அரசியலும் பயனற்றது.

இன்றைய எதிர்க்கட்சி, அரசியல் நாடகங்களிலும் வெற்று வாய்ப் பேச்சுகளிலும் காலத்தைக் கழிக்கிறதே அன்றி, அரசியல் அடைவுகளை பெற்றுக்கொள்ளவதற்கான வழிவகைகளைத் தேடுவதாகத் தெரியவில்லை. இது மிகப்பெரிய சோகம்.

போராடும் மக்களின் போராட்டத்தின் பலனை, அரசியல் ரீதியாக அறுவடை செய்து, அதை மக்களுக்கு வழங்கத்தக்க இயலுமைகொண்ட எதிர்க்கட்சியோ, எதிர்க்கட்சித் தலைமையோ இன்று இல்லை என்பதைத்தான் இது உணர்த்தி நிற்கிறது.

அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்த பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியிடம், சுமந்திரனும் ரணிலும் கேட்ட கேள்விகள் நியாயமானவை. நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்துவிட்டால், அடுத்தது என்ன? அது பற்றிய திட்டம் ஏதாவது இருக்கிறதா என்பது அவர்களது கேள்வி. அதற்கு, ஐக்கிய மக்கள் சக்தியால் முறையான பதிலை அளிக்க முடியவில்லை.

ஜனாதிபதி பதவி நீங்கினாலும் சரி, பிரதமரும் அமைச்சரவையும் பதவி நீங்கினாலும் சரி, அதற்கான மாற்றீடு பாராளுமன்றத்திலுள்ள 225 பேருக்குள், பெரும்பான்மை ஆதரவைப் பெறுபவரே ஆவார். அப்படியிருக்கையில், பிரதான எதிர்க்கட்சியால் தமக்குத் தேவையான பெரும்பான்மையை பாராளுமன்றத்தில் பெற்றுக்கொள்ள முடியதாவிடத்து, அவர்கள் செய்யும் இந்த அரசியல் நாடகங்களால், யாருக்கு என்ன பயன்?

"நான் தான் ஜனாதிபதி வேட்பாளராக வேண்டும்" என்று ரணில் விக்கிரமசிங்க 2015இல் அடம்பிடித்திருந்தால், மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடித்திருக்க முடியாது. ஒன்றுக்கொன்று முரணானவர்கள், ஒரு பொது எதிரியை வீழ்த்த ஒன்றிணையும்போது, பல விட்டுக்கொடுப்புகள் அவசியமாகின்றன.

விட்டுக்கொடுப்பு என்பது, அரசியல் தலைமைத்துவத்தின் முக்கிய பண்புகளுள் ஒன்று. அத்தோடு, அனைவரோடும் கலந்தாலோசித்து, ஒன்றுக்கொன்று முரணானவர்களைக்கூட அரவணைத்து ஒன்றாக அழைத்துச் செல்லும் தலைமையொன்று எதிர்த்தரப்பில் இருந்தால் மட்டும்தான், எதிர்க்கட்சியால் தமது அரசியல் காய்நகர்த்தல்களைச் செய்யமுடியும்.

இல்லையென்றால், 65 பேரை வைத்துக்கொண்டு, அரசியல் நாடகங்களையும் வெற்று வீராவேசப் பேச்சுகளையும் நிகழ்த்திக்கொண்டு காலங்கழிக்க வேண்டியதுதான்.

அப்படியானால், பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு, தேர்தலுக்குப் போக முடியுமா என்று சிலர் கேட்கலாம். இன்றைய நிலையில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டுமானால், அந்தப் பிரேரணையும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கும் பெரும்பான்மை வேண்டும்.

எத்தனை பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொரு தேர்தலைச் சந்திக்கத் தயாராக இருக்கிறார்கள்? இந்தச் சந்தர்ப்பத்தில் தேர்தல் நடந்தால், இந்தப் பாராளுமன்ற உறுப்பினர்களில் பாதிப்பேர்கூட மீளத் தெரிவுசெய்யப்படுவது சந்தேகமே!

இந்த நிலையில், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஓய்வூதியம் பெற வேண்டுமென்றால் பாராளுமன்றத்தின் முழு ஆயுளளவுக்கும் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தால் மட்டுமே அது கிடைக்கும். ஆகவே, எத்தனை பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றம் கலைக்கப்படுவதை விரும்புவார்கள்? இந்தக் காரணங்களைப் பொதுவெளியில் சொல்ல அவர்களால் முடியாவிட்டாலும், வேறு அரசியல் காரணங்களைச் சொல்லி, மறுதேர்தலுக்குச் செல்வதைத் தவிர்க்கவே அவர்கள் முயல்வார்கள்.

ஆகவே, இன்றைய நிலையைச் சுருக்கமாக விவரிப்பதானால், இலங்கை அரசியல் ஒரு முட்டுச் சந்தில் முட்டி மோதி நிற்கிறது. பாவம் மக்கள்! வரிசைகளிலும் போராட்ட ஸ்தலங்களிலும் உளன்று கொண்டிருக்கிறார்கள். இதெல்லாம் இந்நாட்டுக்கு வாய்த்த சாபத்தின் விளைவோ, என்னவோ?

## கடிதங்கள்

### நெடுந்தீவில் இருந்து வெளியேறும் மக்கள்

யாழ். நெடுந்தீவு பிரதேசத்தில் போதிய வசதிகள் இன்மை மற்றும் தொழில் வாய்ப்பின்மை என்பவற்றால், பூர்வீகமாக வாழ்ந்த மக்கள் வேறு இடங்களுக்கு குடிபெயர்ந்து வருகின்றனர்.

யாழ். மாவட்டத்தின் மிகவும் பழைமை வாய்ந்த தீவுகளில் ஒன்றாக காணப்படும் நெடுந்தீவில், போதிய வசதிகள் இன்மை மற்றும் தொழில் வாய்ப்புகள் இன்மை காரணமாக பரம்பரை பரம்பரையாக நெடுந்தீவில் வாழ்ந்த மக்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களில், வசதி வாய்ப்புகளையும் தொழில்களையும் தேடி குடிபெயர்ந்து வருகின்றனர். குறிப்பாக, நெடுந்தீவு மேற்கு சாறாப்பிட்டி வீட்டுத்திட்டம், நெடுந்தீவு கிழக்கு 12ஆம் வட்டாரம், 13ஆம் வட்டாரம் போன்ற பகுதிகளில் வாழ்ந்த மக்கள் அண்மைக்காலமாக அதிகளவில் வெளியேறியுள்ளனர்.

அதாவது, மருத்துவ வசதி உள்ளிட்ட போதிய அடிப்படை வசதிகள் இன்மை, தொழில் வாய்ப்புகள் இன்மை காரணமாக அதிகளவான மக்கள் நெடுந்தீவில் இருந்து, வசதி வாய்ப்புகளைத்தேடி வெளியேறி வருகின்றார்கள்.

இவ்வாறு ஒரு பகுதியினர் வசதி வாய்புகளைத்தேடி வெளியேறிவரும் நிலையில், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள், குறித்த பகுதிகளில் தொழில் வாய்ப்புகள், வருமானங்கள் இன்றி தாம் பெரும் கஸ்டங்களை அனுபவிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

யது பாஸ்கரன்






Cinnamon மழைக்காடுகள்

# மறுசீரமைப்பு செயற்றிட்டம்

*Cinnamon Hotels & Resorts* தனது பிந்திய நிலைபேறாண்மை செயற்றிட்டமான '*Cinnamon* மழைக்காடுகள் மறுசீரமைப்பு செயற்றிட்டம்' என்பதை *Ruk Rakaganno* (இலங்கை மரங்கள் பாதுகாப்பு சங்கம்), இலங்கை வனாந்தர திணைக்களம், ஜோன் கீல்ஸ் மையம் ஆகியவற்றுடன் இணைந்து அறிமுகம் செய்துள்ளது. இந்தத் திட்டத்தினூடாக மூன்று வருட காலப்பகுதியில் 50 ஏக்கர் சேதமடைந்த மழைக்காடுகளை மறுசீரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்படும். இயற்கை வனாந்தர மீள்வளர்ச்சி என்பது, சர்வதேச ரீதியில் சாத்தியக்கூறான காலநிலை மாற்ற தீர்வாக அமைந்திருப்பதுடன், இலங்கையின் உயிரியல் பரம்பல் தொடர்பில் புதிய யுகத்தில் ஆரம்பித்து வைப்பதாக அமைந்திருக்கும்.

*Ruk Rakaganno* அமைப்பின் தலைவர் துஷி பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையர்கள் மத்தியில் பரவலாக அறியப்படும் '*Ruk Raks*' (மரப் பாதுகாவலர்கள்) இந்தக் கைகோர்ப்பின் பிரதான இலக்காக சிங்கராஜ வனாந்தரப் பகுதியில் ஈர வலயத்தில் சேதமடைந்த நிலையில் காணப்படும் 50 ஏக்கர் மழைக்காடுகள் பகுதியை மறுசீரமைப்பதாக அமைந்துள்ளது. இந்த முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்துக்கு ஜோன் கீல்ஸ் மையம் நிதிப் பங்களிப்பை வழங்குகின்றமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்வதுடன், இந்தத் திட்டத்தில் கைகோர்த்துள்ளமைக்கும் நன்றி தெரிவிக்கின்றோம்" என்றார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் இந்த 50 ஏக்கர் பகுதி காணப்படுகின்றது. நாட்டில் எஞ்சியிருக்கும் சில இயற்கை வனாந்தரங்களில் ஒன்றான சிங்கராஜா வனாந்தரத்தில் *UNESCO* உலக மரபுரிமை பாரம்பரிய பகுதியாக கருதப்படும் உயிரியல் பரம்பல் காணப்படும் பகுதியிலிருந்து சுமார் 3.5 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. 50 ஏக்கர் பகுதியை மறுசீரமைப்பது மற்றும் மீளமைப்பது என்பதனூடாக பல்வேறு நீர்வீழ்ச்சிகள், கலாசாரம், சமய முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்களைக் கொண்டுள்ள இப்பிராந்தியத்தின் உயிரியல் ரீதியான முக்கியத்துவத்தை மேலும் வளமூட்டுவதாக அமைந்திருக்கும். '*Cinnamon* மழைக்காடுகள் மறுசீரமைப்பு செயற்றிட்டம்' இனால் உயிரியல் பரம்பலை பாதுகாப்பது தொடர்பில் பணியாற்றும் அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் பணியாற்றும் கூட்டாண்மை நிறுவனங்களுக்கு பொருத்தமான முன்மாதிரியான செயற்பாடாக அமைந்திருக்கும்.

*Cinnamon Hotels & Resorts* ஐச் சேர்ந்த ஊழியர்களை தன்னார்வ அடிப்படையில் இந்தத் திட்டத்தில் பங்கேற்பதற்கான ஊக்குவிப்புகள், பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

ஜோன் கீல்ஸ் மையத்தின் சார்பாக சமூகப் பொறுப்புணர்வு செயற்பாடுகளுக்கான தலைமை அதிகாரி கார்மலின் ஜயசூரிய கருத்துத் தெரிவிக்கையில், "சிங்கராஜ வனாந்தரப் பகுதியைச் சூழவுள்ள முக்கியத்துவம் வாய்ந்த சூழல்கட்டமைப்புகளை பாதுகாப்பதில், பங்களிப்பு வழங்குவதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம். நிதியளிப்பு எனும் எமது அர்ப்பணிப்புக்கு மேலதிகமாக, ஜோன் கீல்ஸ் குழுமத்தின் ஊழியர்களை தன்னார்வ அடிப்படையில் ஈடுபடுத்துவதற்கு நாம் எதிர்பார்ப்பதுடன், சமூகத்தைச் சேர்ந்தவர்களையும் ஈடுபடுத்த எதிர்பார்க்கின்றோம். அவர்களினூடாக சேதமடைந்த தாவரங்களை அகற்றுவது, தாவரச் செய்கையை மேற்கொள்வதற்கு மண்ணைத் தயார்ப்படுத்துவது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த நடவடிக்கையினூடாக செயற்றிட்டத்தின் உரிமையாண்மை தொடர்பான உணர்வு தூண்டப்படுவதுடன், மறுசீரமைப்பு தொடர்பில் ஊழியர்களுக்கு தன்னிறைவை வழங்குவதாகவும் அமைந்திருக்கும்" என்றார்.

செயற்றிட்டத்தின் ஈடுபாட்டு திட்டங்களின் அங்கமாக, *Cinnamon properties* இன் விருந்தினர்களை பயிற்றுவிக்கப்பட்ட இயற்கை செயற்பாட்டாளர்களால் இந்தப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, இந்தத் திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் நோக்கம் பற்றிய விளக்கங்கள் வழங்கப்படும். மரமொன்றை நட விரும்பும் விருந்தினர்களுக்கு கையிருப்பிலுள்ள தாவரங்கள் மற்றும் அவற்றின் விலைகள் பற்றி அறிவிக்கப்படும். அதற்கான செலவை குறித்தி விருந்தினர் ஏற்க வேண்டும். சிறிய குன்று ஒன்றில் ஏறியதும், அவர்களுக்கு இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படும் பிரதேசத்தை 360 பாகையில் பார்வையிடக்கூடியதாக இருக்கும். அதனைத் தொடர்ந்து ஏற்கெனவே தெரிவு செய்யப்பட்ட பகுதியில் விருந்தினர்கள் கொள்வனவு செய்த தாவரக் கன்றை பயிரிடுவதற்கும், நீர் ஊற்றுவதற்கும், தாவரக் கன்றில் முத்திரை பொறிப்பதற்கும் வாய்ப்பு வழங்கப்படும். அதனூடாக காலப்போக்கில் குறித்த தாவரத்தின் வளர்ச்சியை பார்வையிடக்கூடியதாக இருக்கும். காலப்போக்கில் இந்தத் திட்டத்துக்கு உலகளாவிய ரீதியில் காணப்படும் சூழல் ஆர்வலர்கள் மற்றும் மாணவர்களை கவர்ந்திழுப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பைரஹா ஃபார்ம்ஸ் பிஎல்சியின்

# சூழல் நலன்சார் கட்டமைப்பு மேம்படுத்தல்




இலங்கையில் அறிவை வளர்ப்பதன் அவசியத்தை உணர்ந்து, பைரஹா ஃபார்ம்ஸ் பிஎல்சி தொடர்ந்து நான்காவது ஆண்டாக, சூழல் நலன் இலக்குடன் தனது தனித்துவச் செயற்றிட்டமான '*Bairaha Help to Learn*' நிகழ்ச்சித்திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

நாடு முழுவதும் உள்ள அதன் அனைத்து பண்ணைகள், தொழிற்சாலைகள், அலுவலகங்களில் உள்ள அனைத்து ஊழியர்களின் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு இந்தச் செயற்றிட்டம் ஆதரவை வழங்குகிறது. இதன் விளைவாக, தற்போது நாடளாவிய ரீதியில் தரம் ஒன்று முதல் 13 வரை கல்வி கற்கும் ஊழியர்களின் பிள்ளைகளான ஏறக்குறைய 600 மாணவர்கள், இந்த வருடாந்த முயற்சியின் மூலம் பைரஹாவின் வர்த்தக நாமமிடப்பட்ட பாடசாலைப் புத்தகப் பைகள், காகிதாதிகள் அடங்கிய அன்பளிப்புப் பொதிகளைப் பெற்றுள்ளனர்.

அதேசமயம், ஒருபுறம் நாட்டின் எதிர்கால சிற்பிகளை வளர்க்கும் பைரஹா ஃபார்ம்ஸ் பிஎல்சி, 2022 ஆம் ஆண்டின் விடியலைக் கொண்டாடும் வகையில், தனது ஊழியர்களுக்கு தனித்தனியாக சிறிய தொட்டிகளில் வளர்க்கப்பட்ட வீட்டுச் செடிகளை அன்பளிப்புச் செய்து, சுற்றுச்சூழல் உணர்வுள்ள மனப்பான்மையை குடிமக்கள் மத்தியில் ஊக்குவிப்பதன் மூலம், மிகவும் சக்திவாய்ந்த ஒரு நோக்கத்தையும் வெளிப்படுத்தியுள்ளது.

இயற்கையை மதிக்க வேண்டும், இய்கையைப் பாதுகாக்க வேண்டும், எதிர்காலத்துக்காக அதைப் பொறுப்புடன் பேணிப் பராமரிக்க வேண்டியதன் அவசியத்தை, ஊழியர்கள் மத்தியில் வலியுறுத்தும் நோக்கத்துடன் தாவரங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

தனது ஊழியர்கள், அவர்களது குடும்பங்களின் நலனுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட பல முயற்சிகள் குறித்து கருத்து தெரிவித்த பைரஹா ஃபார்ம்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், தலைமை நிர்வாக அதிகாரியுமான யாக்கூத் நளீம் "பைரஹா ஃபார்ம்ஸ் பிஎல்சி நிறுவனத்தில் சமூக நலன் உணர்வில், நாங்கள் மிகவும் தீவிரமான அக்கறை கொண்டுள்ளோம். அதனாலேயே, பண்ணையின் புத்தம்புதிய தரத்தை மட்டுமல்ல, நுண்ணுயிர் எதிர்ப்பிகள், ஹோர்மோன்கள், *MSG* சேர்க்கை இன்றிய தயாரிப்புகளையும் தக்கவைக்கும் புதிய தயாரிப்பு வரிசைகளை அறிமுகப்படுத்துவதில் நாங்கள் தனியாக கவனம் செலுத்துகிறோம். நமது வருங்கால சந்ததியினரின் சிந்தனைகளை வளர்ப்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டியதும் அதே அளவு முக்கியமானது. அவர்களின் கல்விப் பயணத்தில் பங்கெடுப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைவதுடன், 2018 முதல் கடந்த நான்கு ஆண்டுகளாக எங்கள் கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்குப் பாடசாலை உபகரணப் பொருட்களை வழங்குவதில் உண்மையிலேயே பெருமிதம் கொள்கிறோம். ஆனால், நாம் வாழுகின்ற பூமி ஆரோக்கியம் இல்லையென்றால் ஏனைய இவை அனைத்தும் வீணானவை. அந்த உணர்வில்தான் நாம் அனைவரும் அங்கம் வகிக்கும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் நிலைபெறச்செய்யவும் தேவையான, முடிந்தளவு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்" என்று குறிப்பிட்டார்.

*Bairaha Help to Learn* செயற்றிட்டம் ஆண்டுதோறும் கிட்டத்தட்ட 600 மாணவர்களுக்கு உதவி வருகின்றது. ஒவ்வோர் ஆண்டும், பைரஹா ஃபார்ம்ஸின் தொழிற்பாட்டு இடங்களில் ஒன்றில் நடைபெறும் வருடாந்த நிகழ்வின் மூலம், ஊழியர்களின் பிள்ளைகளுக்கு மிகவும் தேவையான பாடசாலை உபகரணப் பொருட்கள் அன்பளிப்புச் செய்யப்படுகின்றன.

2018ஆம் ஆண்டு முதல், ஆனமடுவ, நிக்கவெரட்டிய, ஹிரிபிட்டிய, பஸ்யாலவில் உள்ள அதன் பதப்படுத்தும் ஆலையிலும் கூட நிகழ்வுகள் நடத்தப்பட்டன. இந்த ஆண்டு அன்பளிப்பு விழாவுக்கான இடமாக பஸ்யாலயில் உள்ள பதப்படுத்தும் தொழிற்சாலை தேர்ந்தெடுக்கப்பட்டது.

திருவனந்தபுரம்

குழந்தைகளைக் குறிவைக்கும்

# 'தக்காளி காய்ச்சல்'

## 85 குழந்தைகள் வைத்தியசாலையில் அனுமதி

கேரள மாநிலம் கொல்லத்தில் புதுவகை வைரஸ் காய்ச்சல் பரவி வருகிறது. காய்ச்சல், உடல்வலி, கை, கால்கள் வெள்ளை நிறமாக மாறுதல் உள்பட பல அறிகுறிகளுடன் குறிப்பாக ஐந்து வயதுக்கு உட்பட்ட ஏராளமான குழந்தைகள், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள்.



தொடர்ந்து நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனையில் 'தக்காளி காய்ச்சல்' எனப்படும் புதிய வகை வைரஸ் பரவி வருவது தெரியவந்தது.

இந்த வைரஸ் வேகமாகப் பரவி வரும் ஆரியங்காவு, அஞ்சல், நெடுவத்தூர் ஆகிய பகுதிகளில் சுகாதாரத்துறை அதிகாரிகள் முகாமிட்டு, நிலைமை குறித்து கண்காணித்து வருகிறார்கள்.

புதிய வைரஸ் காய்ச்சல் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறார்கள். 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு இதன் பாதிப்பு அதிகமாக இருப்பதால் பெற்றோர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என சுகாதாரத்துறை அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

கொல்லம் மாவட்டத்தில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் இதுவரை 85 குழந்தைகள், தக்காளி காய்ச்சலால் பாதிக்கப்பட்டு இருப்பது உறுதி செய்யப்பட்டு உள்ளது.

பழநி

# லூலூவை வரவிடோம்



தமிழக சட்டப் பேரவையை மகாபலிபுரத்துக்கு மாற்றுவதற்கான வேலைகளை திராவிட முன்னேற்ற கழக (தி.மு.க) அரசு ஆரம்பித்துள்ளதாக தமிழக பாரதிய ஜனதா கட்சியின் (பா.ஜ.க) தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

பழநி தண்டாயுதபாணி சுவாமி கோவிலில், நேற்றுமுன்தினம் (07) தரிசனம் செய்த அவர், பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

"அண்ணா திராவிட்ட முன்னேற்றக் கழக (அ.தி.மு.க) ஆட்சியில் வால்மார்ட் நிறுவனம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து போராடிய கட்சிகள், தற்போது லூலூ நிறுவன விடயத்தில் அமைதியாக உள்ளன. தமிழகத்தில் லூலு மால் தொடர்பாக ஒரு செங்கல்கூட வைக்க பா.ஜ.க அனுமதிக்காது. சாலையோர வியாபாரிகள், சிறு வியாபாரிகளை பாதிக்கும் வகையில் அமையும் லூலூ மார்க்கெட் நிறுவனத்தை வரவிடமாட்டோம் என்றார்.

சென்னை

# தரம் பிரிக்காத குப்பைக்கு அபராதம்

சென்னை மாநகராட்சியில் தினசரி சராசரியாக 5 ஆயிரத்து 200 தொன் திடக்கழிவுகள் தூய்மைப் பணியாளர்களால் தினமும் வீடுகளில் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட குப்பைகள் கொடுங்கையூர், பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு அழிக்கப்படுகின்றன.



இந்தநிலையில் வீடுகளில் வீசவேண்டியை குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என பொதுமக்கள் தரம் பிரித்து முறையாக மாநகராட்சி ஊழியர்களிடம் வழங்க வேண்டும் என திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் தெரிவிக்கின்றன.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட இடங்களில் குப்பைகளை தரம் பிரித்து வழங்காத தனிநபர் வீடுகள், அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு 15 நாள்களுக்கு கால அவகாசம் வழங்கி நோட்டீஸ் வழங்கப்பட உள்ளது.

அவ்வாறு நோட்டீஸ் வழங்கிய 15 நாள்களுக்கு பின்னரும், குப்பைகளை தரம் பிரித்து வழங்காத தனி நபர் வீட்டினருக்கு ரூ.100 அபராதமும், அடுக்குமாடி குடியிருப்பினருக்கு 1,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ககன்தீப் சிங் பேடி எச்சரித்துள்ளார்.

போரூர்

# தண்ணீர் இல்லா பந்தலுக்கு தீயை மூட்டிய போதை

சென்னை கோயம்பேடு 100 அடி சாலையில் உள்ள தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் (தே.மு.தி.க) தலைமை அலுவலகம் முன்பாகப் போடப்பட்டிருந்த தண்ணீர் பந்தல், மர்ம நபரால் தீ வைத்து எரிக்கப்பட்டது.

இதுகுறித்து கோயம்பேடு பஸ் நிலைய பொலிஸில் தே.மு.தி.க முறைப்பாடு செய்தது. கண்காணிப்பு கெமராக்களின் காட்சிகளை அடிப்படையாக வைத்து, விசாரணை நடத்தினர்.

வாடகை வண்டியொன்றின் சாரதியே, இவ்வாறு தீ மூட்டிவிட்டு தப்பிச்சென்றமை கண்டறியப்பட்டது. வண்டி இலக்கத்தை வைத்து முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் சாரதி சிக்கிக்கொண்டார்.

ஜம்மு

# பாகிஸ்தானின் 'டிரோன்' விரட்டியடிப்பு

சமீபகாலமாக பாகிஸ்தானில் இருந்து டிரோன்கள் மூலமான அச்சுறுத்தல், அதிகளவில் இருந்து வருகிறது என இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக டிரோன்களை கண்காணிக்கவும், அவற்றை சுட்டு வீழ்த்தவும் பாதுகாப்பு படை வீரர்களுக்கும், எல்லை பாதுகாப்பு படையினருக்கும் (பி.எஸ்.எப்.) பிரத்தியேக பயற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஜம்முவில் உள்ள அரினா செக்டார் பகுதியில் இருக்கும் சர்வதேச எல்லை பகுதிக்குள் நேற்று முன்தினம் (07) இரவு 7.25 மணியளவில் டிரோன் ஒன்று பறந்தது. டிரோனில் சிறிய சிவப்பு விளக்குகள் மின்னியதால் அதனை பி.எஸ்.எப் வீரர்கள் கண்டறிந்தனர். அந்த டிரோன் பாகிஸ்தான் பகுதியில் இருந்து வந்ததும் தெரிய வந்தது.


இதைத் தொடர்ந்து எல்லை பாதுகாப்பு படையினர் டிரோனை குறிவைத்து சுட்டனர். டிரோன் அங்கிருந்து உடனடியாக பாகிஸ்தானுக்குள் பறந்து மறைந்துவிட்டது.

துப்பாக்கியால் சுடுவது தெரிந்ததும் ரிமோட் கண்ட்ரோல் மூலமாக பாகிஸ்தான் பயங்கரவாதிகள், இராணுவத்தினர் அந்த டிரோனை அந்நாட்டுக்கு திருப்பி இருக்கலாம். அந்த டிரோனில் இருந்து ஆயுதம் உள்ளிட்ட ஏதேனும் பொருட்கள் எல்லை பகுதியில் போடப்பட்டு இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அங்கு தீவிர தேடுதல் வேட்டை நடந்து வருகிறது என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்ரீநகர்

# தீவிரவாதிகளுக்கு சிம் அட்டை விநியோகம்

ஜம்மு காஷ்மீரில் அலைபேசி சிம் அட்டை விற்பனையாளர்கள் சிலர், சிம் அட்டை விற்பனையில் மோசடியில் ஈடுபட்டுள்ளனர். கற்பனையான பெயரில் சிம் அட்டை வழங்கியது, ஒருவரின் அடையாள ஆவணங்களை பயன்படுத்தி மற்றொருவருக்கு சிம் அட்டை வழங்கியது என இவர்கள் முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளனர்.




இந்த சிம் அட்டைகளை தீவிரவாதிகள், அவர்களின் கையாட்கள், போதைப்பொருள் கடத்துவோர், பிற கிரிமினல்கள் பயன்படுத்தி வருவது தெரியவந்த நிலையில், அதுதொடர்பாக பொலிஸார் 11 வழக்குகள் பதிவு செய்துள்ளனர்.

இந்த வழக்குகளில் கூடுதல் ஆதாரங்கள் திரட்டுவதற்காக ஜம்மு காஷ்மீர் முழுவதும் 19 இடங்களில் மாநில புலனாய்வு முகவரக(எஸ்ஐஏ) அதிகாரிகள், நேற்று முன்தினம் (07) சோதனை நடத்தினர். சோதனை நடைபெற்ற இடங்களில் பெரும்பாலானவை சிம் அட்டை விற்பனையாளர்களுடன் தொடர்புடைய இடங்கள் ஆகும்.

இதுகுறித்து அதிகாரி ஒருவர் கூறும்போது, "எல்லைக்கு அப்பால் பாகிஸ்தானில் உள்ள தங்கள் எஜமானர்களுடனும் ஜம்மு காஷ்மீரில் உள்ள கையாட்களுடனும் தீவிரவாதிகள் தொடர்பு கொள்வதற்காக சில சிம் அட்டைகள் வாங்கப்பட்டுள்ளன. இந்தச் சோதனையில் 3 வழக்குகளில் இதற்கான வலுவான முதற்கட்ட ஆதாரம் கிடைத்துள்ளது" என்றார்.

இத்தாலி

# புட்டினின் சொகுசு கப்பல் பறிமுதல்





இத்தாலி அரசு அண்மையில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் சொகுசு கப்பலைப் பறிமுதல் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த கப்பலானது பழுது பார்ப்பதற்காக இத்தாலியின் மரினா டி கராரி என்ற துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டது. பழுது பார்க்கப்பட்டு, மீண்டும் புறப்பட தயாரான நிலையிலேயே இத்தாலி அரசினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மதிப்பில் சுமார் 25,000 கோடி ரூபாய் பெறுமதியுடைய இக் கப்பலில் 6 தளங்களும் 2 ஹெலிகொப்டர் இறங்கு தளங்களும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இக் கப்பலானது புடினுக்குச் சொந்தமானது என்பதற்கான சான்றுகளைப் பிரபல ஊடகமொன்று வெளியிட்டுள்ளதாகவும், எனினும் இந்தக் கப்பல் ரஷ்யாவின் எண்ணெய் நிறுவனமான ரோஸ்னப்டின் முன்னாள் தலைவர் எட்வர்ட் குடைநட்டோவ் என்ற பெயரில் உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நைஜீரியா

## விமான சேவைகள் தற்காலிகமாக இரத்து



உக்ரேன் - ரஷ்யா இடையே இடம்பெற்றுவரும் போரின் எதிரொலியாக, சர்வதேச அளவில் எரிபொருளின் விலை தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது.

குறிப்பாக நைஜீரியாவின் பணமதிப்பின்படி விமான எரிபொருள் லீற்றர் ஒன்றுக்கு 190 நைராவில் இருந்து திடீரென 700 நைராவுக்கு உயர்த்தப்பட்டு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், எரிபொருள் விலையேற்றத்தால் நைஜீரிய விமான நிறுவனங்கள் தங்களுடைய சேவைகளை இன்று (09) முதல் மறுஅறிவித்தல் வரை தற்காலிகமாக இரத்து செய்யுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசு முயற்சி எடுத்தபோதும், தொடர்ந்து எரிபொருள் விலை உயர்வடைந்து வருவதால் நீடித்த விமான சேவையைத் தொடர முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான்




## பொது இடங்களில் பெண்கள் புர்கா அணிய உத்தரவு

ஆப்கானிஸ்தானில் பொது இடங்களுக்குச் செல்லும் பெண்கள், புர்கா அணிந்திருக்க வேண்டும் எனத் தலிபான் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் இருந்து 2021ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் அமெரிக்க படைகள் வெளியேறியதைத் தொடர்ந்து அந்நாட்டில் தலிபான்களின் ஆட்சி இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் பெண்களின் கண்ணியம், பாதுகாப்புக் கருதி அவர்கள் பொது இடத்துக்குச் செல்லும்போது, உடல் முழுவதையும் மறைக்கும்படி புர்கா அணிந்திருக்க வேண்டும் எனத் தலிபான் அரசாங்கம் நல்லொழுக்க அமைச்சகம் நேற்று முன் தினம் (07) உத்தரவிட்டுள்ளது.

ஹங்கேரி



### தம்பதிகள் தடைதாண்டும் போட்டி:

## எடைக்கு நிகராக பியர் பரிசு

ஹங்கேரியில் அண்மையில் நடைபெற்ற தம்பதிகளுக்கு இடையிலான தடைதாண்டும் ஓட்டப் போட்டி, மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

260 மீற்றர் தூர பந்தயக் களத்தில், மனைவியைத் தோளில் சுமந்தவாறு கணவன், சேறு, குட்டை, மணல் மேடு, டயர்கள் ஆகியவற்றைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்த தடைகளைத் தாண்டி, இலக்கை அடைவதே இப்போட்டியின் நிபந்தனையாகும்.

இந்நிலையில் கோலாகலமாக நடைபெற்ற இப்போட்டியில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த தம்பதிகள் கலந்து கொண்டதோடு, முதலிடம் பிடித்த தம்பதிக்கு பரிசுப் பொருட்களும், அவர்களது எடைக்கு நிகரான பியர் போத்தல்களும் வழங்கப்பட்டு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கியூபா



### உணவகத்தில் வெடி விபத்து;

## 32 பேர் உயிரிழப்பு

நட்சத்திர விடுதியொன்றில், எரிவாயு கசிவால் ஏற்பட்ட வெடிவிபத்தில், 32 பேர் உயிரிழந்த சம்பவம் கியூபாவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கியூபாவின் தலைநகரான ஹவானாவில் உள்ள 'சரடோகா' என்ற நட்சத்திர விடுதியிலே மே ஆறாம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுமார் 86 அறைகள் கொண்ட இவ்விடுதியில், திருத்தப் பணிகள் இடம்பெற்றுவந்த போதே, இயற்கை எரிவாயு செல்லும் குழாயில் கசிவு ஏற்பட்டு, இவ்வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்விபத்தால் குறித்த கட்டடம் முழுமையாகச் சேதமடைந்து உள்ளதாகவும் திருத்தப்பணிகள் இடம்பெற்றுவந்த காரணத்தால் அங்கு சுற்றுலா பயணிகள் யாரும் தங்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இவ் விபத்தில் இதுவரை 32 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 74 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஐ.பி.எல்:

# கொல்கத்தாவை வீழ்த்திய லக்னோ

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), பூனேயில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கொல்கத்தா நைட் றைடர்ஸுடனான போட்டியில் லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட லக்னோ, குயின்டன் டி கொக்கின் 50 (29), தீபக் ஹூடாவின் 41 (27), மார்க்கஸ் ஸ்டொய்னிஸின் 28 (14), ஜேஸன் ஹோல்டரின் 13 (04) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், அன்ட்ரே ரஸல் 3-0-22-2, சுனில் நரைன் 4-0-20-1, டிம் செளதி 4-0-28-1 என்ற பெறுதியைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 177 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா, ஜேஸன் ஹோல்டர் (3), ஆவேஷ் கான் (3), மொஹ்சின் கான், துஷ்மந்த சமீர, ரவி பிஷ்னோயிடம் தொடர்ச்சியாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 14.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்று 75 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், அன்ட்ரே ரஸல் 45 (19), சுனில் நரைன் 22 (12) ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகனாக ஆவேஷ் கான் தெரிவானார்.

இந்நிலையில், மும்பையில் நடைபெற்ற மற்றைய போட்டியில் பஞ்சாப் கிங்ஸை ராஜஸ்தான் றோயல்ஸ் வென்றிருந்தது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப், ஜொனி பெயார்ஸ்டோ 56 (40), ஜிதேஷ் ஷர்மா ஆட்டமிழக்காமல் 38 (18), பானுக ராஜபக்‌ஷ 27 (18), லியாம் லிவிங்ஸ்டோன் 22 (14) ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், யுஸ்வேந்திர சஹால் 4-0-28-3, இரவிச்சந்திரன் அஷ்வின் 4-0-32-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 190 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான், யஷஸ்வி ஜைஸ்வாலின் 68 (41), ஷிம்ரோன் ஹெட்மயரின் ஆட்டமிழக்காத 31 (16), ஜொஸ் பட்லரின் 30 (16) ஓட்டங்களோடு 19.4 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், அர்ஷ்டீப் சிங் 4-0-29-2 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக யஷஸ்வி ஜைஸ்வால் தெரிவானார்.

இந்நிலையில், இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மும்பை இந்தியன்ஸும், கொல்கத்தா நைட் றைடர்ஸும் மோதவுள்ளன.



## பார்சிலோனா செல்லும் அலோன்ஸோ?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சியின் பின்களவீரரான மார்கோஸ் அலொன்ஸோவைக் கைச்சாத்திடுவது குறித்து ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா கருத்திற் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்தாண்டு வரையில் செல்சியுடன் ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள 31 வயதான அலோன்ஸோவின் ஒப்பந்த நீடிப்பு குறித்து புதிய உரிமையாளரின் கீழே செல்சியில் பேச்சுக்கள் ஆரம்பிக்கவுள்ளன.



### அம்பாறை டி.எஸ். சேனநாயக்கவை

## வென்ற கல்முனை சாஹிரா

அஸ்ஹர் இப்றாஹீம்

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான பிரிவு மூன்று கடினபந்து கிரிக்கெட் போட்டியில் கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி அணி, இரண்டு ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

சாஹிரா தேசிய கல்லூரி, அம்பாறை டி.எஸ். சேனநாயக்க தேசிய பாடசாலைக்கும் இடையில் அண்மையில் அம்பாறை வீரசிங்க விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சாஹிரா தேசிய கல்லூரி அணி முதலில் துடுப்பாட்டத்தில் ஈடுபட்டு 29.1 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 85 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாட களமிறங்கிய அம்பாறை டி.எஸ். சேனநாயக்க தேசிய கல்லூரி 36.3 ஓவர்களில் 83 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்து, இரண்டு ஓட்டங்களால் தோல்வியைத் தழுவிக் கொண்டது.

### இங்கிலாந்து பிறீமியர் லீக்:


## பிறைட்டனிடம் தோற்ற யுனைட்டெட்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியனின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-4 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் தோற்றது.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற வொல்வர்ஹம்ப்டன் வொன்டரேர்ஸுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் செல்சி சமப்படுத்தியிருந்தது.

இந்நிலையில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பருடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் சமப்படுத்தியது. லிவர்பூல் சார்பாகப் பெறப்பட்ட கோலை லூயிஸ் டயஸ் பெற்றதோடு, டொட்டென்ஹாம் சார்பாகப் பெறப்பட்ட கோலை சண் ஹெயுங்க்-மின் பெற்றிருந்தார்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 83 புள்ளிகளுடன் லிவர்பூல் முதலிடத்தில் உள்ள நிலையில், ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ள நடப்புச் சம்பியன்கள் மன்செஸ்டர் சிற்றியும் 83 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் காணப்படுகிறது. 67 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் செல்சியும், ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ள ஆர்சனல் 63 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் காணப்படுகின்றது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் திங்கட்கிழமை, 09 மே 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.